Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 327 மார்கழி. December. 2023

Orientalisch
Textilien &
Schmuck
33 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
29TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

# ராஜபக்ஷிக்கள் மீதான தீர்ப்பு!
# தேர்தல் ஆண்டில் மாறும் களநிலை

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

திரையரங்கம்






இடம் மாறும் வெளிச்சங்கள்
– சேவியர்

செல்வி
தரணிகா பத்மபாதன்

இதழ் : 327

S.K.SILKS
GOLD PARAADISE
Dortmund நகரில்...
அன்பான உபசரிப்பு இதுவே
ராஜ முத்திரையின் சிறப்பு




என்றும்
தரமும் மலிவும்
நிரந்தரம்
நாடுங்கள்
மகிழுங்கள்!

நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்

Mr.P.Sritharan
Proprietor
Tel: 0231 9501 647
Adler Str 33-44137
Dortmund





# 'அது எமது இல்லை' என்று கேட்கத் தோன்றவில்லை

தீபாவளி அன்றும் கொண்டாடினோம். எதற்காககொண்டாடினோம் என்பதைவிட, மகிழ்ச்சியே மேலாக இருந்தது!

அப்ப எல்லாம் வலன்ரைன்ஸ் டே,இல்லை, இந்த பேபி சவர் இல்லை (வளைகாப்பு இப்படி தமிழ் நாட்டில் இருந்தது அதுவும், சிவாஜி நடித்த 'வடிவுக்கு வளைகாப்பு' படம்தான் சொன்னது.), இப்படி கனக்க இல்லைகள் இருந்தன.

எல்லாவற்றையும் எழுத அது இருந்தது, இது இருந்தது என்று பதில்கள் வரலாம்.

நான் இப்ப சொல்லப்போவது, பண்டிகைகளின், உண்மைத்தன்மையை பற்றி இல்லை. ஆளுக்கு ஒரு கருத்து அதற்கு வரும், அது அவரவர் சுதந்திரம். ஒவ்வோரு பண்டிகைகளுக்கும், பின்னே ஏதோ ஒரு பொருள் இருக்கலாம், அவை எல்லோருக்கும் பொது என்றும் அமையாது. எனவே அதனை விடுவோம்.

நாம் தீபாவளி சிறுவயதில் கொண்டாடினோம். புது ஆடை அணிவது என்பது தீபாவளி அன்று தந்த பெரு மகிழ்ச்சி.

அப்போது எல்லாம் நினைத்தவுடன் Shopping போவதும், அளவு இல்லை என்றால் 14 நாட்களில் திருப்பிக் கொடுப்பதும் அப்ப கிடையாது. தாய், தகப்பன் புதுசா எதும் வாங்கித்தந்தால் சரிதான்.

புது சட்டையில் உள்புறமாக மஞ்சள் பிரட்டி விடுவார்கள். காரணங்கள் பல. அவற்றைபற்றி தாய் தந்தை பாட்டன் பாட்டி இவர்கள் பல கதை சொல்வார்கள், நீங்களும் அறிந்தும் இருப்பீர்கள் அதனை விடுவோம்.




● மாதவி

தீபாவளி எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி தரும். அதற்கு எல்லை இல்லை.

பாடசாலையில் படிக்கும் காலம், தீபாவளிக்கு 4 நாட்களுக்கு முன்பே தபாலில் தீபாவளி வாழ்த்துகள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவுனர்கள், மெல்ல அரும்பும் காதலர்கள் என்று வாழ்த்துகள், அனுப்புவோம்.

ஒரு வாழ்த்து அனுப்ப 15 சதம் முதல் 50 சதம் வரைதான் வரும். முக்கியமாக தீபாவளி வாழ்த்து மடல் கடை எங்கும் தொங்கும். கடவுள் படம், சினிமா ஜோடிகள் படம், இயற்கை காட்சிகள், தீபங்கள், என




பல வாழ்த்து மடலில் இருக்கும். வயதுக்கு ஏற்ப வாழ்த்து மடல்கள் விற்பனையாகும்.

பொதுவாக அதிகம் அன்று முன்னணியில் இருந்தது சினிமாஜோடிகளது படம்தான்.

எமக்கு அது நன்றாக நினைவிருக்கும். அந்த வாழ்த்துமடல்களை யாழ்ப்பாணம் நகரத்தில் தயாரித்து வெற்றி கண்டவர் மாவிட்டபுரம் சிவம். இவர் நன்கு அறியபட்ட வாழ்த்துமடல்களை தயாரிக்கும் ஒருவர்.

08 ஆம் பக்கம் பார்க்க...


21 ஆவது ஆண்டு நிறைவில் மகிழ்வுடன் உங்கள்
செல்வராஜா
Selvaraja Gold House




Selvarajah gold house இன் 21 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நகைகள் அனைத்தும் அதிரடி மலிவு விலையில்

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுதிட்டத்தில் இணைந்து நீங்களும் ஒரு அதிஸ்ட்டசாலி ஆகுங்கள்.

அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துகளைத் தெருவித்துக் கொள்கின்றோம்.






162 b Mitcham road | London | sw 17 9NJ | Tel: 0208 767 3795 | 078 25 005 269

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 327



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# ராஜபக்ஷக்கள் மீதான தீர்ப்பு! கலக்கத்தில் மொட்டு அணி!!



**இலங்கையிலிருந்து ஆர்.பாரதி**

பொருளாதாரக் குற்றங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகள் இருவரையும் நிதித்துறையைக் கையாண்ட அதிகாரிகள் சிலரையும் உயர் நீதிமன்றம் குற்றவாளிகளாக இனங்கண்டிருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு எந்தவிதமான பாரிய தண்டனையும் விதிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு 1,50,000 ரூபா தண்டப்பணமாக அறிவிக்கப்பட்டிருக் கின்றது. இதனைவிட அவர்களுக்கு எந்தவித மானதண்டனையும்இல்லைஎன்பதுஎதிரணி யினருக்கு ஏமாற்றம்தான்!

அவர்களுடைய குடியுரிமை பறிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கருத்துக்கள் எதிர்க்கட்சிகளால்



முன்வைக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் அனைவருக்குமே அவர்கள் இழப்பீட்டைக் கொடுக்க வேண்டும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ராஜபக்ஷக்களு க்கு அரசியல் ரீதியாக பெரும் பின்னடை வைக் கொடுத்திருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

ராஜபக்ஷக்களால் உருவாக்கப்பட்ட "மொட்டு அணி" எனக்கூறப்படும் பொது ஜன பெரமுன இதனால் கலங்கிப்போயிரு க்கின்றது. கடந்த வருடத்தில் உருவான பொருளாதார நெருக்கடி மொட்டு அணியை பெரும் பின்னடைவுக்குத் தள்ளியிருந்தமை அனைவருக்கும் தெரியும். இந்த நிலையில், இந்த நீதிமன்றத் தீர்புபு அவர்களை நிலை குலையச் செய்திருக்கின்றது. தினசரி நடை

## தேர்தல் ஆண்டில் மாறும் களநிலை

பெறும் மொட்டு அணியின் ஊடகவிய லாளர் மாநாடு இரண்டு வாரங்களுக்கு நிறுத் தப்பட்டிருக்கின்றது.

### நெருக்கடிக்குள் மொட்டு அணி!

ராஜபக்ஷக்களை குற்றவாளிகளாக உயர் நீதிமன்றம் அடையாளப்படுத்தியமை, பொது ஜன பெரமுன (SLPP) கட்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் வலுவான தொடர்பைக் கொண்டுள்ளனர். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ராஜபக்ஷவின் நம்பகத்தன்மையையும் சட்டப்பூர்வமான தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படு த்தும், இது மொட்டு அணியின் ஆதரவு தளத்தை பலவீனப்படுத்தும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மொட்டு அணி மீதான மக்கள் நம்பிக்கையை சிதைக்கக்கூடும். ஏனெனில் கட்சி ஊழல் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது. இது கட்சி யின் இமேஜை கெடுத்து, புதிய வாக்காளர் களை ஈர்ப்பதை மேலும் கடினமாக்கும். அதனைவிட, உயர் நீதிமன்ற தீர்ப்பு மொட் டுவில் உள் பிளவுகளுக்கு வழிவகுக்கும். சில கட்சி உறுப்பினர்கள் ராஜபக்சவுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கலாம், மற்றவர்கள் அவர்களிடமிருந்து விலகி இருக்கலாம். இது கட்சிக்குள் பதற்றத்தையும் ஸ்திரமின் மையையும் ஏற்படுத்தலாம்.

ராஜபக்ஷக்கள் பொருளாதாரக் குற்றங்க ளில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டு சட்டரீதி யான விளைவுகளை எதிர்கொண்டால், அவர்கள் கட்சிக்குள் தங்கள் பதவிகளில் இருந்து விலக நிர்ப்பந்திக்கப்படலாம். இது தலைமை வெற்றிடத்தை ஏற்படுத்தி கட்சி யின் செல்வாக்கை பலவீனப்படுத்தலாம்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்கால தேர்தல்களில் மொட்டுவின் செயல்திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். கட்சி தனது ஆதரவு தளத்தை தக்கவைக்க போராடலாம், மேலும் புதிய வாக்காளர்களை ஈர்ப்பது கடினமாக இருக்கலாம். அதனைவிட, மொட்டு ஆதரவாளர்கள் ராஜபக்ஷக்கள் மீது விரக்தி அடைந்தால், அவர்கள் மற்ற கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஆதரிக் கும் வாய்ப்பு அதிகம்.

ஒட்டுமொத்தமாக, பொருளாதாரக் குற்றங்களுக்கான குற்றவாளிகளாக ராஜபக் சவை உயர் நீதிமன்றம் அடையாளப்படுத் தியமை பொது ஜன பெரமுனையில் குறிப் பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...




# 'உங்களுக்கு பொருட்கள் தமிழ் நாட்டில இருந்து வருகுது' நக்கலும் கிரந்தமும்



நேற்று வரைக்கும் சிரித்துக் கொண்டிருந்த வெய்யில் கழன்று காலையிலேயே மழை தூறத் தொடங்கியிருந்தது, தூறிய மழையோடு சேர்த்தே பயணிக்கிற காற்றைப்போல காலையிலேயே புறப்பட்டு காங்கேசன் துறை கொழும்பு கடுகதி தொடருந்தில் பயணித்துக் கொண்டிருந்தேன். காலை 6.15 ற்கு புறப்பட்ட புகையிரதம் 9.15 ற்கு அனுராதபுரத்தை கடந்திருந்தது. வயிற்றில் கொஞ்சம் பசியும் எதையாவது சாப்பிடு என்கிற மூளையின் கட்டளையும் சேரவே நிலையத்தின் சிற்றுண்டிச்சாலையில் பணிஸ் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்து இருக்கையில் வந்தமர்ந்தேன்.

அருகிருக்கையில் ஏதோ சலசலப்பு, வழமைக்கு மாறாக தென்படவே பட்டும் படாததுமாகத் தலையைத் திருப்பி என்ன நடக்கிறது என்பதை அவதானித்தேன், சுமார் 70 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவருக்குத்தான் அபிசேகம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

விசயம் இதுதான். தண்ணீர்ப்போத்தல் விற்றுக்கொண்டு வந்த வியாபாரி ஒருவரிடம் ஒரு லீற்றர் தண்ணீர் போத்தல் ஒன்றை வாங்கியிருக்கிறார் அந்தப் பெண்மணி, தண்ணீர்ப் போத்தலின் உத்தரவாத விலை 130 ரூபாய், ஆனால் வியாபாரி 200 ரூபாய் என்றிருக்கிறார்,



"ஏன் இவ்வளவு கூட எடுக்கிறீங்கள்?"

இதுதான் அந்தப் பெண்மணியின் விவாதம்.

"இதுதான் விலை" – இது வியாபாரி

"நான் கடை வைச்சிருக்கிறன், எனக்கு விலை தெரியும்" என்றார் அந்தப் பெண்மணி.

"எங்க இருக்கு கடை?"

"கிளிநொச்சி".

இரண்டு உரையாடல்களும் சிங்களத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது, அடுத்து நடந்த உரையாடல்தான் விசேடம்.

அந்தப் பெண்மணி கிளிநொச்சி என்று சொல்லி முடிக்கவும், "ஓ உங்களுக்கு சாமான்கள் தமிழ் நாட்டில இருந்து வருகுது, அப்ப கிளிநொச்சியில அடிச்ச விலையை போய் கேட்டு வாங்குங்க" என்று கடினமாகவும் கிரந்தமாகவும் சொல்லிக்கொண்டு அடுத்த வியாபாரத்தை நோக்கி "வத்துறு போத்தல், வத்துறு போத்தல்" என்றபடி நகர்ந்தது அந்த வியாபாரியின் குரல். என்பங்கிற்கு விசனமான பார்வை ஒன்றை அந்த வியாபாரி மீது வீசிவிட்டு ரயிலின் சாளரத்தின் வழி வெளியை நோக்கினேன், மரங்கள் தன் பங்கிற்கு ஓடிக்கொண்டிருந்தன, நாங்களும்தான். ஓடிக்கொண்டிருக்கிறோம்.

அந்த வியாபாரியின் நக்கலும் கிரந்தமும் நிறைந்த அந்தக் குரல் மீள மீள வந்து போய்க்கொண்டிருந்தது. ஓடுகிற தொடருந்தில் கைநிறைய பாரத்தை சுமந்து கொண்டு வந்து விற்பனை செய்வது ஒன்றும் இலகுவான காரியம் இல்லை, "அந்தக் கடினத்தால் விலையை கூட்டி விற்கிறேன்" என்று சொன்னால் கூட "சரி பரவாயில்லை" என்று சமாளிக்கலாம், அப்படி என்றால் கூட பொருளின் சரி அரைவாசி விலையை உயர்த்துவது என்பது அதிகம்தான், அத்தோடு இப்படி ஒரு எகத்தாளமான பதிலை சொல்லுவதற்கு எத்தகைய புரிதல் இருந்திருக்க வேண்டும்?

பலாலியிலும் காங்கேசன் துறையிலும் தமிழ்நாட்டின் வழியாக சாமான்கள் வந்து குவிகிறது என்பதுதான் சமானியர்களுடைய புரிதல் போலும்,ஆனால் அன்றைக்கு இயங்கிய காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக கப்பல்களில் வந்து சேருகிற பண்டங்களை ஏற்றி, இறக்கி இடம் மாற்றுகிற அன்றைய பண்டகசாலை இன்றைய "தல்செவன" என்பது இவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? இன்னமுமே அடைபட்டுக் கிடக்கிற துறைகளைப் பற்றி எத்தகைய புரிதல் இருக்கும்?

சரி இது இருக்கட்டும், நாங்களும் இப்படித்தான். சளைத்தவர்கள் அல்லவே, பொதுவாக எனக்கு வெளியே உணவருந்தும் பழக்கம் அரிது, எப்போதாவது ஒரு மாறுதலுக்காக தெரிவு செய்து உண்பது வழமை. யாழ்ப்பாணத்தில் இருக்கிற பிரபல ஆரோக்கிய உணவருந்தும் இடம் (Hotel) ஒன்றில் ஒருநாள் இப்பிடித்தான், உணவுப் பட்டியலில் Ginger beer ஒன்றையும் வாங்கியிருந்தேன், 150 ரூபா விலை பொறிக்கப்பட்ட குளிர்பானத்தின் விலை 250 ரூபாய் என்று அச்சாகியிருந்தது, இதென்ன 150 ரூபாய் 250 ஆகியிருக்கிறது என்றேன். அப்படித்தான் என்று சிரித்துக் கடந்தார்கள்.

நாங்கள் மட்டும் என்ன? குறைவா? இருக்கிற பணத்தை இரண்டு மூன்று மடங்குகளாக்குவதற்காக தேர்ந்தெடுக்கிற வியாபாரம் "உணவுச் சாலைகள்" அதுவும் அந்தக் கிச்சன் இந்தக் கிச்சன், உயர்தர விருந்து, ஆரோக்கிய விருந்து அது இது என்று பெயர்களை வைப்போம், அப்படியே சுரண்டுவோம்.

ஆனால் இவற்றை எல்லாம் மாவட்ட செயலகத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற குறித்த விலை மற்றும் நுகர்வோர் தொடர்புடைய விடயங்களை கவனிக்கின்ற அதிகாரசபையோ திணைக்களமோ கவனிக்கிறதா என்பதும் சில இடங்களில் கேள்விதான். காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே !!




சர்மிலா வினோதினி




Violin, Keyboard & Guitar

ஐரோப்பாவில் நடாத்தப்படும் கர்நாடக மேலைத்தேய சங்கீத பரீட்சைக்கான பாடத்திட்டத்திற்கேற்ப Online ஆகவும் நேரடியாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0044 7917 128581
00 49 1521 9338758
004915210334455 (WhatsApp)





வெற்றிமணி திருமண சேவை

மணமகள் தேவை

யேர்மனியில் Master படித்து முகாமையாளராக பணிபுரியும் நற்குணமுள்ள 29 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல எமது மகனுக்கு ஏற்ற நற்குணமுள்ள பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்:
+4915787447156



# இளைப்பாறுவதற்கும் ஒரு காலம் வந்து தான் விடப் போகின்றது

“ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு விதைக்க ஒரு காலமுண்டு, விதைத்ததை அறுவடை செய்ய ஒரு காலமுண்டு“ என்கிறது வேதாகமம் (பிரசங்கி 3:1-2).

உண்மைதான், நாங்கள் பிறப்பதற்கு ஒரு காலம் இருந்தது, பிறந்து வளர்வதற்கு ஒரு காலம் இருந்தது,வளரும் போது படிப்பதற்கு ஒரு காலம் இருந்தது, படித்த பின் வேலை செய்வதற்கு ஒரு காலம் இருந்தது, வேலை செய்து கொண்டு குடும்பம் உருவாக்குவதற்கு ஒரு காலம் இருந்தது, இப்பொழுதோ எப்பொழுதோ நாங்கள் இளைப்பாறுவ தற்கும் ஒரு காலம் வந்து தான் விடப் போகின்றது.

போர் சூழலில் வளர்ந்து ஆளான எங்கள் வாழ்க்கையில் பல விடயங்கள் எங்களை அறியாமலேயே எங்கள் கட்டுப்பாட்டில் இல்லாமலே நடந்தேறி விட்டன. நாளைக்கு நாங்கள் உயிர் வாழ்வோமா இல்லையா என்று அறியாமலேயே வாழ்ந்த காலத்தில், என்ன படிக்கப் போகின்றோம், என்ன வேலை பார்க்கப் போகின்றோம், என்ற திட்டமிடலை கொஞ்சமும் சிந்திக்கவே முடியாத சூழலிலேயே நாங்கள் வாழ்ந்தோம், வளர்ந்தோம்.

அடிபாடுகளுக்குள் அடிபட்டு அலைந்து திரிந்து,இடம்பெயர்ந்து எங்கோ அகதி முகாமில் வாழ்ந்து, நிவாரண வரிசையில் நின்று, ஆமிட்டயும் ஈபிட்டயும் பிடிபட்டும் பிடிபடாமலும் தப்பி, யார் யாருடைய வீடுகளில் வாழ்ந்து, யார் யாரையோ சந்தித்து, எப்படியோ புலம்பெயர்ந்து, புலம்பெயர்ந்த தேசத்திலும் முட்டி மோதி வாழ்க்கையை சீராக கொண்டோட படாதபாடு பட்டு, கொஞ்சம் ஆசுவாசமாக மூச்சு விடலாம் என்று யோசிக்க, இளைப்பாறும் காலம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிய ஆரம்பிக்கிறது. போராட்டக் காலத்தில் வாழ்ந்த எங்கள் வாழ்க்கையே போராட்டமாகிப் போன எங்களுக்கு, எதையுமே திட்டமிட்டுச் செய்த பழக்கமும் இல்லை, திட்டமிடுவதற்கான எண்ணம் எழவுமில்லை, அவ்வாறு எழுந்தாலும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலை எங்களுக்கு அமைந்ததும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், திட்டமிடல் என்பதற்கான அகச் சூழலும் புறச்சூழலும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து பழகிவிட்ட எங்களுக்கு, திட்டமிடுதல் அதிகம் அவசியப்படப் போகும் இளைப்பாறுதல் எனும் காலகட்டம் ஒரு பெரும், மாபெரும் சவாலாகத் தான் இருக்கப் போகின்றது.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

இளைப்பாறுதல் அல்லது ஓய்வு பெறுதல் என்பது career அல்லது தொழில் சம்பந்தமான ஒன்றாக இருக்க வேண்டுமே அன்றி வாழ்க்கை முறை சம்பந்தமான ஒன்றாக இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது. எந்தத் தொழிலில் இருந்தாலும் வயதாகும் போது எங்களை விட திறமையான, எங்களிலும் இளமையான, எங்களை விட குறைவான சம்பளங்களை பெறும் இளையவர்கள் நிறுவனங்களில் இணைந்து கொள்ளும் பொழுது எங்களது தேவை அந்த நிறுவனங்களுக்கு அவசியமற்றதாக அல்லது அவசியம் குறைந்ததாக மாறும் காலமே இளைப்பாறுவதற்கான காலம் என்று கருதிக் கொள்ளலாம்.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ அந்த இளைப்பாறுதலுக்கான காலம் எங்களை நெருங்கிவிட்டது. அந்தக் காலத்தின் நீட்சி சிலருக்கு ஐந்து வருடங்களாக இருக்கலாம், சிலருக்கு 10 வருடங்களாக இருக்கலாம், இன்னும் சிலருக்கு அதைவிட அதிகப்படியாக இருக்கலாம். ஆனால் யாராக இருந்தாலும் அந்த இளைப்பாறும் காலம் எப்போதோ எப்படியோ வந்து தான் விடப் போகின்றது. இந்த ஓய்வு பெறுதலுக்கான கால கட்டத்திற்கான திட்டமிடல் பன்முகங்களைக் கொண்டது. ஒருவரின் குடும்பச் சூழ்நிலை, பிள்ளைகளின் வயது, நிதிவளம், தொழில், உடல் ஆரோக்கியம் என்று பல விடயங்கள் இந்த இளைப்பாறுதலிற்கான திட்டமிடலின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தவல்ல முக்கிய காரணிகளில் அடங்கும்.

இளைப்பாறுமலில் இந்தப் பன்முகக் காரணிகளின் முக்கியத்துவம் ஒரு பக்கம் இருக்க, இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது ஒருவரின் இளைப்பாறுதலிற்கான mindset என்பது தான். புறக் காரணிகள் பலமாக இருந்தாலும் ஒருவரின் mindset தான் அவரின் இளைப்பாறுதலை நிம்மதியாகவும் இனிமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். இளைப்பாறுதலிற்கு உத்தமமான mindset ஐ உருவாக்குவதில் மிகவும் முக்கியமானது எங்களது நட்பு வட்டாரமும் உறவுகள் வட்டாரமும் தான். இவ்வளவு கால வாழ்க்கை அனுபவம், இந்த வட்டாரங்களில் யார் எவர் எப்படிப்பட்டவர் என்ற நல்ல பட்டறிவை எமக்கு நிச்சயமாக தந்திருக்கும்.

ஒருவரை சந்திக்கும் போது அல்லது அவரிடம் இருந்து அழைப்பு வரும் போதோ உங்கள் உள்ளம் உவகை கொள்கிறது என்றால் அவர் இனியும் உங்கள் தொடர்பு வட்டாரத்தில் இடம்பிடிக்க வேண்டும். அவ்வாறான ஒருவருடன் நீங்கள் கதைக்கும் பொழுதுகள் இனிமையாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும், அந்தப் பொழுதுகளை உங்கள் உள்ளம் மீண்டும் மீண்டும் இரை மீட்டும், உவகை கொள்ளும்.

ஒருவரிடம் இருந்து அழைப்பு வரும் போதோ அவரை எங்காவது காணும் போதோ “ஐயோ இவனா..அலுப்பன்“ என்று உங்கள் உள்ளம் பதைபதைத்தால் அவ்வாறன நபர் உங்கள் வட்டாரத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக கழற்றபட்ட வேண்டியவராகிறார். இவ்வாறான நபர்கள் உங்களது நிம்மதியான இளைப்பாறதுலுக்கு அவசியமான அந்த அற்புதமான

28 ஆம் பக்கம் பார்க்க...





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


QATAR
Luckyfly
Summer
HOLiDAY-2024
JANUARY | FEBRUARY
MARCH | APRIL
OUT OF SEASON
ab799.-
40
KG
BOOKING
START NOW
COLOMBO TO
JAFFNA
TRANSPORT
SERVICE
49€
முன்பதிவு ஆரம்பம்...
முன்கூட்டியே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்
இன்றே அழையுங்கள்!
0234 2399032
0179 14 84892
ESSENER STR.26
44793 BOCHUM
info@lucky-fly.de
www.lucky-fly.de

# உலகில் புலம்பெயர்ந்த மக்களை வைத்து ஒரு நாட்டை உருவாக்கினால்! உலகின் ஐந்தாவது மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடாக அது இருக்கும்!!

மனித சமூக வரலாற்றில் மிக நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு நிகழ்வு என்றால் அது புலம்பெயர்வுதான் !

ஆம் , உணவிற்காக இடம்பெயர்ந்து வாழவேண்டிய கட்டாயத்தில் இருந்த கற்கால மனிதன், என்று நதி நீரைப் பயன்படுத்தி தனக்கான உணவினை தானே பயிரிட்டு உணவைத்தேடி அலையாமல் உண்ண ஆரம்பித்தானோ அன்றிலிருந்து நாடோடியாக இருந்த அவனது வாழ்க்கை ஒரே இடத்தில் குடும்பமாக, ஓர் சமூகமாக மாறியதெனலாம். ஆனாலும் , நாளுக்குநாள் அதிகரித்த மனிதனின் தேவைகளும் தேடல்களும் அவனை தொடர்ந்தும் ஒரே இடத்தில் தேங்கி நிற்கவிடவில்லை என்றே கூறவேண்டும். “திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு“ எனும் ஔவையின் வாக்கிற்கேற்ப மனித மனம் கடலை தாண்டி சிந்திக்கத்தொடங்கியபோதே மனித வரலாற்றின் மிகப்பெரிய புலம்பெயர்வுகள் இடம்பெறத் தொங்கின என்றாலும் மிகியில்லை.





பிரியா இராமநாதன் (இலங்கை)

முதன் முதலாக யூதர்கள் ஜெருசலேத்திலிருந்து விரட்டப்பட்ட நிகழ்வே உலகின் முதல் புலம் பெயர்தல் நிகழ்வு என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். பல்வேறு நாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்த யூதர்களின் வாழ்வைக் குறிப்பதற்காகத்தான் புலம்பெயர்வு எனும் கருத்து நிலை தோன்றியது. இன்றைய நிலவரப்படி பூர்வகுடிகளை மட்டுமே கொண்ட நாடு என எந்த நாடுமே தனியாக இருக்க வாய்ப்பில்லை எனும் அளவிற்கு நாடுகள் தோறும் புலம்பெயர்வுகள் இடம்பெற்றவண்ணமே உள்ளன. இப்படி இயற்கை பேரிடர்கள், பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், உள்நாட்டு போர், இனவெறி போராட்டங்கள், சமுதாய வேறுபாடுகள், கல்வி, சிறந்த வாழ்க்கைத்தரம் என பற்பல காரணங்களுக்காக ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டிற்குள் சென்று வாழ தொடங்கிய மக்களுக்கான நாளாக அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்தில் டிசம்பர் 18-ம் தேதியை ”புலம் பெயர்ந்தவர்களுக்கான தினம்” என ஐ.நா.சபை கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 4 -இல் அறிவிக்கப்பட்டு தொடர்ந்தும் கடைபிடிக்கப்படுகின்றது.

அந்த வகையில் புலம்பெயர்ந்து புதிய நாடுகளில் தங்கள் வேர்களைப் பதிப்பவர்கள், புதிய நாட்டின் காலநிலை பண்பாடு, சட்டதிட்டங்களுடன் மிகப் பெரிய போராட்டங்களை நடத்த வேண்டி இருக்கிறது. போரினால் புலம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த நாட்டைப் பிரிந்து வந்த மனஉளைச்சலோடு புதிய சூழலுக்கு தங்களைப் பழக்க வேண்டிய அழுத்தமும் இருக்கிறது. இந்நிலையில் அவர்கள் பண்பாட்டு உளவியல் சார்பான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. புகலிடம் கோருவோர் எதிர்கொள்ளக் கூடிய மற்றுமோர் உளவியல் பிரச்சினைகளில் ஒன்றுதன அந்நியமாதல் எனும் நிலைப்பாடாகும்.

**சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம்**




இலங்கையிலும் கூட யுத்தகாலத்தினைவிட மிக அதிகமானோர் கடந்த வருடம் (2022) வெளிநாடுகளில் பாதுகாப்பான வேலைகளுடன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இது இலங்கை வரலாற்றில் மிக உயர்ந்த மனித வள வெளியேற்றமாகும். மேலும் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காகக் வரிசையில் நின்று மரணித்த சம்பவங்கள், குழந்தை பிரசவிப்புகள் என்பன சர்வதேச கவனத்தினை ஈர்த்த நிகழ்வுகளாகும். கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் முப்பதாயிரம் கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் நேரலை மூலம் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பாதுகாப்பற்ற, முறைசாராத

28 ஆம் பக்கம் பார்க்க...

# அகில இலங்கை ரீதியில் புலியாட்டப் போட்டியில் யாழ் - குப்பிழான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் முதல் இடம்!





**தாயகச் செய்தி:**

கடந்த மாதம் அகில இலங்கை ரீதியில் யாழ்–குப்பிழான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், புலியாட்டப் போட்டியில் முதல் இடம் இடம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

நமது மண்ணின் வளமான கலைகள் அரிகிடாது காத்து, அக் கலைகளுக்கு மீண்டும், புத்துயிர் கொடுக்கும்,அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும்,மாணவ மணிகளுக்கும், வெற்றிமணியின் வாழ்த்துகள். கல்வியும் கலையும் நமது இரு கண்கள் என்போம்.




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்



## தீபாவளி நல் வாழ்த்து



# 'அது எமது இல்லை' என்று கேட்கத் தோன்றவில்லை

வாழ்த்துமடலின் பின் பக்கத்தில் அவர் பெயர் மாவிட்டபுரம் சிவம, என இருக்கும். அவ்வளவும் தான் எமக்கான அறிமுகம். ஆனால் மனதில் இன்றுவரை யாவருக்கும் பதிந்த அறிமுகம்.

பெரும்பாலும், ஆசிரியர்களுக்கு நாம் நல்ல மாணவர் எனக் காட்டுவதற்காக கடவுள் படங்களை யும், மென்மையாக காதலை வெளிப்படுத்த" ஆண்கள் பெண்கள் பெயரிலும், பெண்கள் ஆண்கள் பெயரிலும், தமக்கு பிடித்த சினிமா ஜோடிகளது படம் தாங்கும் வாழ்த்து மடல்களை யும், அனுப்புவோம்.

எனக்கும் நல்ல ஞாபகம் கல்லூரியில், ஒரு பெடியன் ஒரு பெட்டைக்கு தீபாவளி வாழ்த்து அனுப்ப, அது யார் என்று தெரிய வர, பெட்டை அதனை வகுப்பாசிரியரிடம், காட்ட வகுப்பு போர்க்களமானது. பெடியனுக்கு ஆசிரியர் இரண்டு காரணங்களுக்காக அடிப்பதாக சொன்னார். ஒன்று ஒரே வகுப்பில் படடித்துக்கொண்டே 50 சதம் செலவு செய்து ஏன் வீட்டுக்கு அனுப்பினாய்? இங்கே நேர மேசில் வைத்திருக்கலாமே.

இப்பவும் என்ர மேசையில் தான் இருக்கு. அந்த 50 சதத்திற்கு 2 போண்டா வாகி சாப்பிட்டு இருக் கலாம்.அன்று முதல் அவர் போண்டா மாஸ்டர் ஆனது வேறுகதை.

சரி.இரண்டாவது காரணம்,எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடிப் படம் ஏன் பெட்டைக்கு அனுப்பினாய்? என்பறக்கல்ல இந்த அடி. ஒளிவிள க்கு படத்தில் கத்திக்குத்து இரத்தம் வடிய பின்னே ஜெயலலிதா கட்டிப்பிடிக்கும் படம்.

ஏன் உனக்கு கத்தி குத்து இல்லாத படம் ஒன்றும் கிடைக்கவில்லையா என அடி. அவன் மனது க்குள் மாவிட்டபுரம் சிவத்தை நொந்துகொண்டது எவருக்கும் தெரியாது.

எனக்கு அப்போ தனித்துவமாக ஏதும் செய்ய விருப்பம். 10 சதத்திற்கு post card. வாங்கி அதில் தீபம் படம் வரைந்து அனுப்புவேன். சக மாணவர்களுக்கும் வரைந்து கொடுப்பேன். கேட்பவர்கள் யாருக்கு அனுப்ப கேட்கிறார்கள் என்பதை பொறுத்து தீபத்தின் சுடர் வடிவம் மாறும். பல சுடர்கள் அக்காலத்திலும் இதயம் போன்ற காதலை வெளிப்படுத்தும் வடிவத்திலேயே வரைய முடிந்தது. அன்பை வெளிப்படுத்த, நட்பை வெளி ப்படுத்த, காதலை வெளிப்படுத்த எல்லாம் இந்த பண்டிகைகளும், வாழ்த்து மடல்களும் உதவும் மகிழ்ச்சியில்" இது தீபாவளி யாருடைய பண்டிகை, ஏன் இந்த பண்டிகை என்று எல்லாம் கேட்க மறந் திட்டோம். இப்பவும் பழசு நினைவில் மகிழ்ச்சி தருவதால், இப்பவும் தீபாவளி எமது பண்டிகையா எனக் கேட்க தோன்ற வில்லை. கொஞ்சம் பொறு ங்கோ இலங்கையில் இருந்து எடுக்கினம்.

'நல்ல ஆட்டு இறைச்சி, பங்குபோட்டு அடிச் சோம், ஒரு ஆடு ஒருலட்சம் ரூபாய்'என்றார்கள். ஆனந்தம் பேச்சில் தெரிந்தது. அவர்களது மகிழ்ச்சியில், அவர்களிடமும்

இது எமது பண்டிகையா எனக் கேட்க மறந்து விட்டேன்.

சரி நல்லது. இப்ப இளசுகள் கொண்டாடும் புது புது பண்டிகைகள், ஏன் எதற்கு என்று கேட்கத் தோன்றவில்லை. அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள். நாளை நினைவுகளை மீட்டும் போது வாழ்க்கை வெறுமை அற்றதாக அல்லவா இருக்கவேண்டும்.

வீட்டில் எவரும் இல்லை, பிள்ளைகள் யாருக் கோ பேபி சவர் என்று போட்டார்கள். இப்பவும் எனக்கு 'அது எமது இல்லை' என்று கேட்கத் தோன்றவில்லை.



கவிதா லட்சுமி (நோர்வே)

# மூழ்கத் தவம் கிடப்பேன்

அவை எனதல்ல.
இருந்தும்
இந்த மேகங்களின்
நகர்தலைத்தான்
கவனித்துக்
கொண்டிருக்கிறேன்

அவை
தொலைவிலிருக்கின்றன
இருந்தும்
இந்த நட்சத்திரங்களோடுதான்
வெகுதூரம் பயணிக்கிறேன்

அவை பேசுவதில்லை
இருந்தும்
இந்தச் செடிகளோடுதான்
உரையாடிக்
கொண்டிருக்கிறேன்

அவை சென்றுவிடுகின்றன
இருந்தும்
அம் மழை நினைவோடுதான்
தேநீர் அருந்துகிறேன்

இது என்னுடையதல்ல
இருந்தும்
இந்தப் பறவையிடம்தான்
ஆத்மார்த்தமாய்
அருகமர்ந்தேன்

எழும் வரும் செல்லும்
அலைகளைப்போல்
துளிர்விடும்
இலைகளைப்போல்

எதுவுமிங்கு எனதில்லை
இருந்தும்
மகாகாலத்தின் ஒரு கணமாம்
இவ் வாழ்கடலில்...

மூழ்கத் தவம் கிடப்பேன்.



அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# பாஸ் எடுத்தும் fail



“மச்சான் பெருங்கண்டம் சோதினை முடிஞ்சுது நாங்கள் வீட்டை போறம், நீ என்ன மாதிரி“ எண்டு ஒண்டாப் படிக்கிற ஹொஸ்டல் காரங்கள் கேக்க, “நானும் போறதுக்கு அலுவல் பாக்கிறன்“ எண்டு போட்டு வெளிக்கிட்டன்.

95 இல இடம்பெயர்ந்து போய் திரும்பி வந்தாப் பிறகு வீட்டுக்காரர் எல்லாரும் கொழும்பு போக நான் மட்டும் தனிச்சு நிண்டு, விட்ட கம்பஸ் படிப்பைப் தொடந்தன். இனிச் சோதினை முடிஞ்சு தான் கொழும்புக்குப் போறதெண்ட முடிவோட இருக்க ( படிக்க) ரெண்டு வருசம் ஓடீட்டுது. தனிநாடு கேட்டுச் சண்டை பிடிக்கேக்க தராம பிறகு இருந்த இடத்தையும் பிடிச்சிட்டு, எல்லாத்தடையும், விதிக்க நாங்களும் தனிய ஒரு நாடாய் வாழ்ந்த காலம் அது. ஆனாலும் எங்களை எந்தத்தடையும் பாதிக்கேல்லை கொழும்புக்குப் போற பாதைத்தடையைத் தவிர.

சரி ரெண்டாவது வருசச் சோதினை முடிஞ்சிது தானே போவம் எண்டால், எப்பிடிப் போறது எண்டு பிரச்சினை வந்தது. ஏனெண்டால் அடையாள அட்டை எமக்கு யாழ்ப்பாணம். வெளி மாவட்டம் எண்டால் மட்டும் முன்னுரிமை கிடைக்கும் எண்ட நிலமையால. இயக்கத்தின்டை “ காம்ப்“, தமிழீழக் காவல்துறை எண்டு இருந்தது. இடம்பெயரந்து போய் திரும்பி வந்தாப்பிறகு அவ்விடம் யாழப்பாணத்தின்டை முக்கியமான இடமாய் மாறிச்சுது.

சரி பாஸ் (clearance) எடுத்து வீட்டை போற அலுவலைப் பாப்பம் எண்டு போட்டு வெளிக்கிட்டு வந்து சைக்கிளை ஆலமரத் தடீல விட்டிட்டு போனா, குறுக்கும் மறுக்குமா மரத்தை நட்டுத் தடியைக் கட்டி தடை ஒண்டு இருந்திச்சுது. அதுகளுக்கால குனிஞ்சும் ஏறிக் குதிச்சும் உள்ள போனா நிறைய லைனில சனம் நிண்டிச்சுது. அங்க போன இடத்தில Government servant, கலியாண வீடு,செத்தவீடு, cancer க்கு மருந்துக்கு ,வெளிநாட்டுக் போறம் எண்டு கன சனம் பிரிஞ்சு மூண்டு நாலு வரிசையில நிண்டிச்சுது. எங்க சனம் குறைவா நிக்கிது எண்டு பாத்திட்டு அங்க ஓடிப் போய் நிக்க அந்தக் கியூ கொஞ்சம் கெதியா முன்னுக்குப் போகத் தொடங்கிச்சுது. என்னடா அதிஸ்டம் அடிக்குது எண்டு யோசிக்க, மற்றப் பக்கம் நிண்ட சனம் சத்தம் போடத்தொடங்க, சத்தத்தைக் கேட்டு எல்லாரையும் கலைச்சுக் கொண்டு போய் ஒரே கியூவில அதுகும் எங்களை கடைசீல கொண்டே விட்டான் ஒரு சீருடையான். ஊர் ரெண்டு பட சீருடைக்காரன் பெரியாளானான். நூறு இருநூறு எண்டு போட்டவன் ( குடுத்தவன்) எல்லாம் ஏணீல ஏறி டக்கெண்டு முன்னால போக, நாங்கள் முன்னுக்குப் போகாமல் அதே இடத்தில இருந்து இன்னும் பின்னுக்கு வந்தன். பாம்பால சறுக்கின மாதிரி. இது அவனால இல்லை எங்கடை சனத்தால. ஒருமாதிரி ரோட்டில இருந்த தடைதாண்டும் ஓட்டத்தில வெண்டு உள்ள போய்ப் பாத்தா வாடகை இல்லாமல் வசதியாக் கிடைச்ச வீடு தான் அவங்கடை office. அங்க Form வாங்க ஒண்டு, அதைக் குடுக்க ஒண்டு, கிடைக் காத்துக்கு அப்பீலுக்கு ஒண்டு, சிபாரிசுக் கடிதத்தோட ஒவ்வொரு அறைக்கு வெளியில யன்னலுக்கால கை, மூக்கு, வாய் எண்டு நீட்டக்கூடியதை நீட்டிக் கொண்டு சனங்கள் நிரம்பி இருந்திச்சுது.

ஒரு மாதிரி Form ஐ வாங்கிக் கொண்டு வீட்டை போய்ப் பாத்தா கனக்க விபரம் கேட்டிருந்திச்சுது. கேட்டதை எல்லாம் நிரப்பினா அதோட கன கடிதங்களும் இணைக்கச் சொல்லிக் கேட்டருந்திச்சுது. GSI தேடிப் பிடிச்சு, அவரிட்டைப் போய் இன்னாரின்டை இன்னார் எண்டு விளக்கம் சொல்லி கடிதம் வாங்கீட்டுப் போனா சொன்னாங்கள் ஏரியா ஆமிக்காம்பில கடிதம் வாங்கு எண்டு. அதை வாங்கப் போனா ஐஞ்சாறு நாள் அலைய விட்டிட்டு, OIC வெளீல போட்டார்,

நாங்களும் தனிய ஒரு நாடாய் வாழ்ந்த காலம் அது

கப்டன் காம்புக்குப் போட்டார், மற்றவர் லீவில போட்டார் எண்டு அலைக்கழிச்சுத்தான் உள்ள விட்டாங்கள்.

உள்ள போய் camp க்குள்ள றயவை பண்ணேக்க பாத்தால் தான் தெரிஞ்சுது எங்கடை வீட்டுக் கதிரை, மணிக்கூடு, அண்ணா வாசிச்ச மிருதங்கம் அதோட அக்கம் பக்கம் வீடுகளில காணமல் போனது எல்லாம் அங்கதான் இருக்குது எண்டு.

இங்க இருக்கிறவரிட்டை கடிதம் மட்டும் பத்தாது எண்டு ஊரெழுவில போய் இன்னொரு clearance எடுக்கோணும் எண்டாங்கள். Respected Sir Your highness எண்டு தெரிஞ்ச எல்லாத்தையும் போட்டுக் கடிதம் எழுதி கையெழு த்து வாங்கிக்கொண்டு வந்தன். File ஒண்டைத் தூக்கிக் கொண்டு திரிஞ்சு எல்லாரிட்டேம் recommendation கடிதம் வாங்கிக் கொண்டு போய் formஐக் குடுக்கவே பத்து நாள் செண்டிச்சுது.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

இந்தக் கெடுபிடியால தேவை இருந்தும் அலைஞ்சு திரியேலாத சனம் போறதையே மறந்திச்சுது, அலைஞ்சு திரிஞ்சும் கிடைக்காத்தால கலியாணம் சில cancel ஆகிச்சுது, லீவு முடிஞ்சு போகேலாத்தால சிலருக்கு வேலை போச்சுது, கொழும்புக்குப் போகக் கிடைக்காமல் கோம்பையன் மணலில cancer treatment சிலதும் முடிஞ்சுது. ஆனால் வெளிநாடு போறவங்களுக்கு மட்டும் கொழும்புக்கே போகாமல் போற route ஐ agency க்காரன் கண்டு பிடிச்சான்.

ஒரு மாதிரி எல்லாத் தடையையும் தாண்டிப் போய் form குடுக்க கியூவில நிண்டா, திருப்பியும் snake and the ladder தான்.

அப்ப கொழும்புக்கு இடைக்கிடை கடபைாவ ம் ஓடினது “ Heli tours “ எண்டு. பாதுகாப்பு படையோட சேந்து தான் போக வேணும். வானத்தில போன ஒரு கடபைாவ கடலுக்கு land ஆக ஆருக்கு ஆர் பாதுகாப்பு எண்டு கேள்வி வந்திச்சுது. அது மட்டுமில்லை, அதுக்கும் பதிஞ்சிட்டுப் பாத்துக்கொண்டு இருக்கோணும், அதோட காசும் எக்கச் செக்கம். எங்களுக்கு கொழும்பு போக ஒரே வழி கப்பல் தான். மாகோ, கோமாரி,லங்கா முடித எண்டு கன கப்பல் (Cargo) ஓடினது. சாமங்களோட சேத்து ஆக்களையும் ஏத்தி ஓடின கப்பல் தான் இதுகள்.

2000 ஆண்டுக்குப் பிறகு தான் city of Trinco எண்ட மகேஸ்வரன்டை கப்பலை ஓடத் தொடங்கினது ஆக்களுக்கு எண்டு. சோதினை செய்திட்டு results கூட பாக்கப் போகாத நான் Formlf; குடுத்தாப் பிறகு pass list இல பேர் வந்திட்டா எண்டு ஒவ்வொரு நாளாப் போய்ப் பாத்தாப் பேர் இருக்காது. நித்தம் போனாலும் சலிக்காத முற்றம் இந்தப் பாஸ் ( clearance ) எடுக்கிற இடம் தான்.

இயக்கத்திட்டை pass எடுக்கப் போய் இவன், அவன் எண்டு பெடியளை கதைச்ச எங்கடை சனம், ஆர் என்ன Rank, என்ன வயசு எண்டு பாக்காம எல்லா ஆமிக்காரனுக்கும் சேர் போட்டுக் கூப்பிட்டுக் கெஞ்சிக் கொண்டு நிண்டிச்சிது. Campus லீவு ஒரு மாதம் எண்டு கொழும்புக்கு வீட்டை போக வெளிக்கிட்டிட்டுப் பாத்துக் கொண்டிருக்க கைச்செலவுக் காசு, சாப்பிடுற சாப்பாடு அளவு, இருக்கிற லீவு நாள் எல்லாம் குறைஞ்சு கொண்டு வந்திச்சுது. அடுத்த கப்பலுக்கு பேர் list

10 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# எசன் தமிழ்ப் பாடசாலையின் சிறப்பான பணி!





தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றம், எசன் தமிழ்ப்பாடசாலை 12.11.23 அன்று நடாத்திய பேச்சு, சித்திர மற்றும் தமிழ்த் திறன் போட்டிகள். இவை வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மாணவர்களது ஆக்கதிறனை ஊக்குவிக்கும் வகையில் இப்போட்டிகள் இடம்பெறுகின்றன.

சிறந்த கட்டுக்கோப்புடன் அமைப்பானது பணியாற்றுவது பாராட்டுக்குரியது.

**வெற்றிமணியின் வாழ்த்துகள்.**

09 ஆம் பக்க தொடர்ச்சி...

## பாஸ் எடுத்தும்...

இல இருக்கு எண்டு ஆரோ சொல்ல வந்த சந்தோசம் A/L results வர மருத்துவ பீடம் கிடைக்கும் எண்டு சொல்லேக்க கூட வரேல்லை.

ஓடிப் போயப் பேரைப் பாத்திட்டு "எப்ப வாறது" எண்டு கேக்க "விடிய காலமை வாங்கோ" எண்டு சொன்னாங்கள். சென்றல் பள்ளிக்கூடம், சென்ஜோன்ஸ் பள்ளிக்கூடம், கைவிட்டருந்த ரெயில்வே ஸ்டேஷன், சிங்கள மகாவித்தியாலம் எண்டு இடத்தை அடிக்கடி மாத்திக் கொண்டிருப்பாங்கள் ஆக்களை ஏத்திக் கொண்டு போறதுக்கு. இந்த முறை "விடியக் காலமை சென்றல் கொலிஜ/க்கு வாங்கோ "எண்டு சொல்லி அனுப்பினாங்கள். அடுத்த நாள் வீட்டை போற ஆவலில விடிய எழும்பப் பிந்தினா விட்டிட்டுப் போயிடுவாங்கள் எண்டு இரவு நித்திரை கொள்ளாம இருந்து விடியப் போய் நிண்டன் திருப்பியும் ஒரு கியூவில. Mis bag ஐ எல்லாம் துளாவி ஒண்டும் இல்லை எண்டு confirm பண்ணிப் போட்டு உள்ள கொண்டே இருத்தி விட்டாங்கள்.

காலமை ஐஞ்சு மணிக்கு ஊரடங்குச் சட்டம் முடிய முதலே வெளிக்கிட்டுப் போனது சாப்பிடாம. பசியெடுக்க மத்தியானம் வரை தண்ணியைக் குடிச்சிக் குடிச்சு இருக்க, அடக்கேலாம அடி வயிறு குத்த ஆரும் பாத்தாலும் பரவாயில்லை எண்டு மூலைக்க ஒதுங்க வேண்டியதாப் போச்சுது. நேரம் போக பசி தொடங்கினாலும் நாளைக்கு வீட்டை போய் நல்லாச் சாப்பிடலாம் எண்ட நப்பாசையில முதல் நாளே வாங்கின தேசிய பிஸ்கட்டான "லெமன் பவ்வை" ஆரும் கேட்டாலும் எண்ட பயத்தில ஒழிச்சு வைச்சுச் சாப்பிட்டன்.

**உடம்பு மூச்சு விட இன்னொரு மூக்கைத் தேடிச்சுது**

ஒருமாதிரிப் பின்னேரம் நாலு மணிக்கு பஸ் ஒண்டில அடைச்சு ஏத்தினா ங்கள் எல்லாரையும். வழக்கம் போல கழழவடிழயசன பக்கம் போக துவக்கோட நிண்டவன் நிமிந்து பாக்க, உள்ள போய் நசு ங்கிக் கொண்டு நிண்டன். பின்சீட்டில பாக், பூட்டேலாத யன்னல், ஆணி மட்டும் களராமல்



எல்லாமே ஆடிக்கொண்டிருக்கிற பஸ் போற ரோட்டெல்லாம் புழுதியைக் கிளப்பிக் கொண்டு போச்சுது. வெய்யிலுக்க என்டை வேர்வையோட பக்கத்தில நிண்டவங்கள் எல்லார்டையும் வேர்வையும் சேந்து, அதோட ரோட்டிப் புழுதியும் படிஞ்சு மூக்கை அடைக்க, உடம்பு மூச்சு விட இன்னொரு மூக்கைத் தேடிச்சுது.

பலாலி ரோட்டால போய் உரும்பிராய் தாண்டிப் போன பஸ் ரோட்டை விட்டிறங்கிக் காட்டுக்கால போறமாதிரி இருந்திச்சுது. கடைசீல இறக்கினது ஒரு "ஆரம்ப பாடசாலை" எண்டு நெக்கிறன். சீமெந்து factory உந்தப்பக்கம் தான் எண்டு ஆரோ சொல்லத் தான் நிக்கிற இடம் காங்கேசன்துறை எண்டு விளங்கிச்சுது.

இறங்கிக் கொஞ்ச நேரத்தில "இண்டைக்கு கப்பல் போகாதாம் காத்துக் கூடவாம்,கடல் கொந்தழிப்பாம்,நிண்டு பாக்கிற எண்டால் பாக்கலாம் இல்லாட்டி திரும்பிக் கொண்டே விடீனமாம் " எண்ட செய்தி பயணத்தை இன்னும் தூரமாக்கியது. சரி நாளைக்குப் போகலாம் தானே எண்டு போட்டு இரவு எல்லாரும் நிண்டம். அடுத்த நாள் காலமை ஆக்கள் எல்லாம் அல்லகோலப்பட செய்தி வந்திச்சுது, "முல்லைத்தீவு கடலில கப்பல் மூழ்கடிப்பாம்" எண்டு. அப்ப தான் விளங்கிச்சுது எங்களை இங்க வைச்சுக்கொண்டு வேற கப்பலை அனுப்பத்தான் இந்தக் கொந்தழிப்புக் கதை எண்டு. கடைசீல ்யளள எடுத்தும் கயடை ஆன மாதிரி அனுமதி கிடைச்சும் போகேலாமல் திருப்பி யாழப்பாணம் வந்து அடுத்த கப்பலுக்குப் பதிய புது கழசஅ வாங்க கியூவில போய் நிண்டன். எல்லாத்திக்கும் ஒரு வழி பிறக்காதா எண்ட ஏக்கத்தோட.





வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag


கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!



6€ Pro Stunde

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free




சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)




19:15– 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்



# புலம்பெயர் தமிழர்களின் அமைப்புகளும் எதிர்காலமும்



தமிழர்களின் புலப்பெயர்வு வாழ்வு ஐந்து தசாப்தங்களைக் கடந்துதிருக்கிறது. பெரும்பான்மையினர் போர் அழுத்தங்களாற் புலம் பெயர்ந்தவர்கள். தமிழ் உணர்வும், தம் நிலம் சார்ந்த பற்றும் இவர்களுடைய வாழ்வில் பல அமைப்புகளைக் கட்டியெழுப்புதலுக்கான உந்துதலாகவும், அடிப்படையாகவும் இருந்திருக்கின்றன.

புலத்தில் வாழும் தம் சந்ததிகளுக்கு தமது மொழி, கலை, கலாசாரம் போன்றவற்றைக் கடத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட அமைப்புகள், கல்விக்கூடங்கள், கலைக் ககூடங்கள் இன்றும் நடைமுறையில் இருக்கின்றன. இவ்வமைப்புகளிற் பணியாற்றியவர்கள் அனைவரும் புலம்பெயர்ந்து வாழும் முதற் சந்ததியினர் தாம். அன்றைய சூழ்நிலையாலும் தேவைகளினாலும் அமைப்புகள் தன்னார்வ அமைப்புகளாகச் செயற்பட்டன.

மூத்த சந்ததியினர் போல இளைய சந்ததியினர்கள் அமைப்புகளிள் ஈடுபாடு காட்டாமல் இருப்பது என்பது எதிர்காலத்தில் அமைப்புகள் இயங்காமல் போவதற்குரிய சாத்தியங்களையே அதிகம் கொண்டிருக்கின்றன. தமது சந்ததிகள் உயர்ந்த வேலைத்தளங்களிற் பணிபுரியும் அளவு சிறந்த கல்வித்தகைமைகளைப் கொடுத்து பெருமிதப்படும்படி வளர்த்து இருந்தாலும், தமது தமிழ் அமைப்புகளின் வீழ்ச்சி சார்ந்த கவலை மூத்த சந்ததியினரிடம் மேலோங்கியே இருக்கின்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகம், தம்மைப் பற்றிய புரிதலையும், சமூகம் சார்ந்து தன்னலமற்ற சிந்தனையையும் வளர்த்துக் கொண்டால் மட்டுமே அமைப்புளை அடுத்த சந்ததியினரை நோக்கி நகர்த்த முடியும். இளம் தலைமுறையினர் அமைப்புகளிடம் இன்னும் வந்து சேராத நிலையில், முதற் தலைமுறையினரின் கையில் மட்டுமே அமைப்புகளின் வளர்ச்சியும், எதிர்காலமும் இருக்கின்றது.

## தமிழ் அமைப்புகள் சார்ந்து இளம் சந்ததியினரின் நிலைப்பாடு

✸ மொழியுணர்வும் பண்பாட்டுணர்வும் முதற்சந்ததிகளின் அளவிற்கு அடுத்த சந்ததிகளிடம் இல்லாமை.

✸ சிறந்த கல்வித் தகமைகளைப் பெற்றுக் கொடுத்து சுயசிந்தனை மிக்க மனிதர்களாக வளர்த்த சந்ததிகளிடம், தமது மொழி, கலை, கலாசாரம் சார்ந்த ஆழ்ந்த அறிதலைக் கொடுப்பதற்கு மாறாக உணர்வு சார்ந்து மட்டுமே அவர்களை வழிப்படுத்தியமை.

✸ தமிழ் அமைப்புகள் மூலம் கிடைக்கும் பதவிகள், பெயர்கள், சமூக அந்தஸ்துகள் இளைய சமூகத்திற்கு ஈர்ப்புடையதாக இல்லாமை. அவர்களுக்கு அவை தேவையற்றதாக இருக்கின்றன.

✸ வாழ்வாதாரங்கள், நிலமைகள், பொருளாதார வசதிகள் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்த போதும், அமைப்புகள் அனைத்தும் முழுமையாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாக மட்டுமே தொடரும் நிலை.

✸ அமைப்புகளை நிர்வகிக்கும் முதல் தலைமுறையினர், இளைய தலைமுறையினரை உள்வாங்கும் முறை அறியாது இருத்தல். அவர்களிடம் நிர்வாக அலுவல்களையும் அதிகாரங்களையும் கையளிக்கும் அணுகுமுறையைக் கொண்டிராதிருத்தல்.

✸ முதற்சந்ததிகளிடம் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளும் அதைக் கையாளும் முறைகளின்பால் இளைய தலைமுறையினருக்கு இருக்கும் ஒவ்வாமையும் எதிர்நிலைப்பாடும்.



கவிதா லட்சுமி (நோர்வே)

## தமிழ் அமைப்புகள் சார்ந்து மூத்த சந்ததியினரின் நிலைப்பாடு

✸ தமிழ் உணர்வும், பண்பாடுகளும் காக்கப்பட வேண்டும் என்ற முனைப்பு.

✸ நிலம் சார்ந்தும், மொழி சார்ந்தும் றொமான்டிசைஸ் – பண்ணப்பட்ட (யதார்த்தமற்ற) மனநிலையில் அமைப்புகளை நடாத்த முயல்வது.

✸ அமைப்புகள் மூலம் கிடைக்கப் பெறும் சமூக அந்தஸ்து, பெயர், பதவிகள், அடையாளம் போன்றவைகளின்பால் உள்ள மோகம்.

✸ தமிழ் உணர்வின் அதீதமும், மொழி அறிவின் போதாமையும்.

✸ ஒரு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் பதவி வகிப்பின், அது பல வகையிலான ஊழலுக்கு வழிவகுக்கும் என்று ஆய்வுகள் சொல்கி ன்றன. தமிழ் அமைப்புகளிளோ பதவிவ கிப்புகள் தசாப்தங்களைக்கடந்து கொண்டிருக்கும் நிலை.

✸ பதவிக்கு வருபவர்களை திறன்நிலை வைத்து தெரிவு செய்யாமல், உணர்வுநிலை (தேசியம், ஊர், நட்பு, பாடசாலை) மட்டுமான அளவுகோள்களை வைத்து தெரிவு செய்தல்.

✸ அமைப்புகளில் இணைந்து கொண்ட இளைஞர்களின் பின்னால் நின்று தமது பிடியில், தமது சிந்தனைப் போக்கில் அவர்களையும் இயக்க முயல்வது.

✸ அமைப்புகளில் இருந்து வெளிவரும் பட்சத்தில் அவர்களுடைய அடையாளம் அழிந்து போகும் என்ற அச்ச நிலையைக் கொண்டிருப்பது.

✸ ஜனநாயகத்தின் பலவீனங்களைப் பயன்படுத்தி சர்வாதிகார தன்மைகளை நடைமுறைப்படுத்தல்.

✸ வெளியேற்றல், அச்சுறுத்தல், அவமானப்படுத்தல், கலாச்சாரத்தினூடு தத்தமது அதிகாரங்களைத் தக்கவைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்

✸ புலம்பெயர்ந்த நாடுகளிற் பெருஞ்சமூகத்தில் உள்ள வேறு பொழுதுபோக்கு அம்சங்களோடு ஒன்ற முடியாத மனநிலை.

✸ தமது அடையாளங்களைத் தமிழ் சமூகத்திற்கு அப்பால், வெளியே எட்டமுடியாத நிலைமை

✸ தமிழ் உணர்வின் அதீதமும், பெருஞ்சமூக மொழி, சட்ட அறிவின் போதாமையும்.

பல துறைகளிலும் முதுநிலைப்பட்டம் பெற்ற (தலைமைத்துவம்,பொருளாதாரம், ஒருங்கிணைப்பாளர், நிர்வாகிகள்) இளயோர் தமிழ் சமூகத்திடம் இருக்கின்றனர். இன்னும் ஒரு தசாப்த காலத்தில் மூத்த சந்ததிகள் அமைப்புகளைத் தொடரும் நிலை இருக்காது என்பதே யதார்த்தம். இன்று காணப்படும் முரண்பாட்டு நிலைகள் இருக்கும்போதே இளம் சமூகத்தினரிடம் நிர்வாகப் பொறுப்புகளை கையளிக்கும் வழிமுறைகளைக் கண்டுகொள்ள வேண்டும்.

நிர்வாகத்துறைகளில் கல்விப்புலமை பெற்ற தமிழ் இளையோர் கையில் நிர்வாகப் பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும். மேலும் மூத்த சந்ததியினர் வழிநடத்தல் என்ற பெயரில் பின்னால் நின்று இயக்காமல் இருத்தல் முக்கியமானது. முழுமையாகவே நிர்வாகங்கள் அடுத்த சந்ததிகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதே தீர்வாக இருக்க முடியும்.









# புலம்பெயர்நாட்டில் தமிழர் மனங்கவர் பரதம்




28.10.2023 அன்று திருமதி. சாவித்திரி சரவணன் M.A.Mphil in Dance அவர்களின் சலங்கையொலி நாட்டியக்கலா மன்றம் ,எசன் நகர மாணவி செல்வி தரணிகா பத்மபாதன் தன் குருவிடமிருந்து அனைத்து நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டு அற்புதமாக ஆடிக்காட்டினாள்.

தமிழரின் கலைகள் அருகிவரும் நிலையிலும்,வாழ்விடச்சூழ்நிலையில் மாணவர்கள் பரதத்தைக் கற்றாலும்,அரங்கேற்றம் காண முன்வருவதில்லை. தரணிகா இதற்கு விதிவிலக்கு. விருப்புடன் கலையைக் கற்றாள். தன் கனவை நனவாக்கினாள். விளையாட்டில் (மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டு) வருடந்தோறும் வீராங்கனையாக வெற்றி சூடியதுடன், தமிழ்மொழியையும் கற்று, ஆசிரியையாகக் கற்பித்தும் வருகிறார். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட இவள் பல மேடைகளில் நடனம் புரிந்துள்ளார். எல்லாச்சிறப்புகளுக்கும் அவள் பெற்றோர்களான திரு.திருமதி பத்மபாதன் அவர்களின் அயராத கடுமையான உழைப்பும்,அக்கறையும் காரணமெனலாம்.தம் மகளின் திறமைகளை இனம் கண்டு ஈடுபடுத்தி அழகு பார்க்கும் அந்தத் தம்பதிகளை வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்பவர்கள் பெற்றோர்கள்.அடுத்து மகிழ்ந்து வாழ்த்துபவர்கள் ஆசிரியர்களே! அவ்வகையில் 30 வருடங்களுக்கு மேலாகப் பரதத்தோடு தன்னை இணைத்துக்கொண்ட சலங்கைஒலி நாட்டியக்கலாமன்ற ஆசிரியையின் திறமையும் கரணியமாகும்.அன்றைய அரங்க நிகழ்வுகள் யாவும் புதுமையாக இருந்தது என அத்தனை நடனக்கலைஞர்களும் வாழ்த்தினார்கள். மலர்வணக்கம் கூடப் புதுமை படைத்தது. கௌத்துவத்தில் நரசிம்ம அவ தாரத்தை இரணியவதம் வரை எடுத்து முக பாவனையுடன் சிறப்பாக ஆடிக்காட்டினாள். தொடர்ந்து அர்த்தநாரீஸ்வர நடனத்தை தகுந்த ஒப்பனையோடு ஆடி ரசிக்க வைத்தாள்.ஒன்றையொன்று பார்த்து வியக்கும்படி குருவின் வழிகாட்டலில் அவளின் நடனங்கள் யாவும் மிகு நேர்த்தியாக அமைந்திருந்தது.குரு ,மாணவி இவர்களுள் யாரைப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. இருவருக்கும் பார்வையாளர்கள் சார்பில் மனம் நிறைந்த வாழ்த்துகள். மக்கள் மனங்கவரும்படி புதியன புகுத்திப் புதுமை படைத்து நளினத்தோடு,கண்ணும்,கதை பேசும் தாரிகையாய் கருத்தோடு கலைநயத்தைக் கண்முன்னே கொண்டுவந்தாள். குருவின் நட்டுவாங்கம்,மதுரக்குரலோன் திரு.கண்ணன் அவர்களின் பாடல் ,வயலின் வித்வான் P.H.D. MA தமிழ்நாடு இராதாகிருஸ்ணன்,கலாஜோதி திரு.அனுஷாந் விஜயகுலசிங்கத்தின் மிருதங்கமும்,அவளின் நடனத்தை மிகவும் மெருகூட்டியது.

மொத்தத்தில் பரதத்தை உயிர்மூச்சாகக் கொண்ட திருமதி சாவித்திரி சரவணனின் திறனை தரணிகா வெளிக்கொணர்ந்து குருவை மகிழ்வூட்டினாள்.அரங்கம் நிறைந்த மக்கள் கூட்டம்,தமிழரின் விருந்தோம்பல், ஆடலில் லயித்த மக்களின் அமைதி, கை தட்டல் அத்தனையும் நிகழ்வில் கண்டோம்.

**படங்கள்: Koness fotos**
**செய்தி: திருமதி கிருஷ்ணவேணி தம்பிராசாஇ எசன் யேர்மனி**



# புதுமைப் பெண்ணாய் பாஞ்சாலி



## எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 32

கலாநூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

ஏக நிலையில் இருக்கும் அமிர்தமாக என்றென்றும் சித்தத்துள் தித்தித்திருக்கும் பாரதி மீது கொண்ட பக்தியை எங்கு சென்றாலும் சொல்லிச் சொல்லி மகிழ்வதில் பெறும் அமிர்த நிலையை உணர்ந்தவளாய் மீண்டும் “ஆடுக ஆத்தி ஆடுக ஆத்தி“ என்று ஆரம்பித்தேன் அண்மைய ஐரோப்பிய பயணத்தில். பாரிஸ் நாட்டில் இரு தசாப்தங்களாக இயங்கி வரும் அபிராமி நடனப்பள்ளியின் அரங்கேற்ற நிகழ்திற்க்குப் பிரதம விருந்தினராக அழைத்திருந்த அன்பினை ஏற்று அங்கு சென்ற போது, அந்த நடனப்பள்ளியில் நிறைந்திருந்த தமிழ் பற்றுக் கண்டு அவர்கள் மீது தனிப்பிரியம் ஏற்பட்டது.

அரங்கேற்ற நிகழ்வின் நாயகி சௌந்தர்யா கலை பூமியாகிய இந்தியாவை பூர்விகமாகக் கொண்டவள். நடனப்பள்ளி இயக்குனர் “நாட்டிய கலாவித்தகர்“ திருமதி ரேனுகா சுரேஷ் அவர்கள் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த ஆசிரியர். நாட்டியத்திற்கும் தமிழுக்கும் தன் நேரத்தை தாரை வார்த்துக் கொண்டிருப்பவர்.

சௌந்தர்யாவின் அரங்கேற்றத்தில் பாரதி பாடல் ஒன்று இருக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார். சில கருப்பொருட்களை முன்வைத்தேன். புதுமைப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தார். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தளைக்கும் என்று ஆடிப் பாடுவதில் பெரும் ஆனந்தத்தினை அறிந்தவளாய் என்னுள் எழுந்த உற்சாகத்திற்கு அளவில்லை. கரும்பு தின்ன கூலியா ?

“அறிவு கொண்ட மனிதவுயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்“ என்ற சொல் ஆழம் என்னுள் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. அவ்வரியை வைத்து ஆரம்பித்து பாரதியின் பாஞ்சாலி சபதத்திற்குள் புகுந்தேன். பாஞ்சாலியை புதுமைப் பெண்ணாக சித்தரிக்கத் தோன்றியது. பாரதியின் புதுமைப் பெண் கவியும், பாரதி





யின் பாஞ்சாலி சபதமும் இணைந்து ஒரு ஆடல் உருப்படியாக வடிந்தது. யாவும் பாரதி அருள்.

**“ஆடி விலைப்பட்ட தாதி நீ – உன்னை**
**ஆள்பவன் அண்ணன் சுயோதனன். –**
**“மன்னர்**
**கூடி யிருக்குஞ் சபையிலே – உன்னைக்**
**கூட்டி வரு“கென்று மன்னவன் –**
**சொல்ல**
**ஓடிவந் தேனிது செய்திகாண். –இனி**
**ஒன்றுஞ்சொலா தென்னொ டேகுவாய்“**

என்று தீயவன் தம்பி கூச்சலிடும் பொழுது கூட,பூணு நல்லறத்தோடு பெண் உரு போந்து நிற்கும் தாய் சிவசக்தியாக பாஞ்சாலி நிக்கிறாள்.

நடு சபைதனிலே கூந்தல் பற்றி இழுத்து வந்து வீசப்பட்ட பாஞ்சாலி துணிந்தெழுகிறாள்,

**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்**
**பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள்**
**கேட்டீரோ!**

என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே முன்னம் இழந்துமுடித்து என்னைத் தோற்றாரா? அவர்கள் தோற்றபின் என்னை நல்கும் உரிமை அவர்களுக்கு இல்லை என்று நீதி கேட்கிறாள். ஆனால்

பிச்சேறி யவனைப்போல் -- அந்தப்
பேயனுந் துகிலினை உரிகையிலே,

அவளுக்காக யாருமே துணை வரவில்லை, நமக்கு நாமே துணை என்ற பெண்ணின் வழக்கத்துக்கு அவள் மட்டும் விதிவிலக்கல்ல. தன் மானம் காத்திட போறாடுகிறாள்.

உட்சோதி யிற்கலந்தாள் -- அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமையுற்றாள்.

இறுதியில் இந்த படைப்பிடம் சரணடைகிறாள். கண்ணபிரானருளால் வென்று நிற்கிறாள்.

**நிமிர்ந்த நன்னடை**
**நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவது**
**இல்லையாம்.. .**

துணிந்தெழும் புதுமைப் பெண்ணாய் பாஞ்சாலி சபதம் எடுக்கிறாள்.

இவ்வாறாக புதுமைப் பெண் வரிகளும் பாஞ்சாலி சபதத்தின் வரிகளும் சரமாரியாக அடுத்ததடுத்து வந்து நெஞ்சை நெருக்கும் காட்சியாக ஆடல் அமைய, புதுமை பெண்ணின் வரிகளை கவி நடையாகவும், பாஞ்சாலி சபதத்தின் வரிகள் இசையாகவும் தொகுத்து இசை வழங்கினோம்.

பாஞ்சாலியாகவும், துரியோதனனாகவும், துச்சாதனனாகவும்,கண்ணனாகவும் மாறி மாறி அபிநயித்த சௌந்தர்யாவின் ஆடல் கண்டு அவையில் இருந்த மூத்த நடன ஆசிரியர்களும், சபையோரும் எழுந்து நின்று கரகோஷம் செய்து தம் பாராட்டுக்களைத் தெரிவித்த நெகிழ் தருணத்தை மறக்க இயலாது. பாரதியும், தமிழும், நம் கலையும் காலத்தினால் அழியாது என்பதனை பறைசாற்றும் விதமாக நடம் புரிந்த இளங் கலைஞர் சௌந்தர்யாவிற்கு என் எல்லையற்ற அன்பும் நன்றிகளும்.

அவ்வண்ணமே அபிராமி நடனப்பள்ளி மாணவர்களுக்கு பாரதியின் புதிய ஆத்திச் சூடி அலாரிப்பினைக் கற்று கொடுத்து, அந்த இள மனங்களில் பாரதியின் மந்திரச் சொற்களைப் பதித்திடும் வாய்ப்பும் கிட்டியது. இவ்விரு நிகழ்வுகள் தவிர , அபிராமி நடனப்பள்ளியின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவிலும் பங்கேற்று, அபிநயக்ஷேத்திராவின் இணையவழி நட்டுவாங்க பட்டையக் கற்கை நெறியில் சித்தியெய்திய அபிராமி நடனப்பள்ளி மாணவிகள் பத்து பேருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தோம்.

புலம்பெயர்ந்த நாட்டினில் காணப்படும் சவால்களை வென்று தமிழும் கலையும் வளர்த்திடும் அனைத்து ஆசிரியர்களும் புதுமைப் பெண்களே.அவர்கள் யாவரும் இன்னும் இன்னும் உளவீரம் கொண்டு உழைத்திட , மனிதர் தம்மை அமர்களாக்கும் ஆற்றல் கொண்ட பராசக்தியின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**போற்றி போற்றி!ஓர் ஆயிரம் போற்றி!**
**நின் பொன்ன டிக்குப்பல் லாயிரம்**
**போற்றிகாண் !**

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

EST: 2014
லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK

அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


7th ANNIVERSARY
K.K.L.
Textilien Schmuck Haushaltsware
7ஆம் ஆண்டு நிறைவு மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
12, 13 ஜனவரி 2024
அனைத்து ஆடைகளும் 50 % விலைக்கழிவில்
மல்லிகைப்பூ மாலை, கல்யாண மாலை இங்கு கிடைக்கும்
சாறி பிளவுஸ் தைத்து கொடுக்கப்படும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எங்கள் இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Rheinische str.56 44137 Dormund | Tel: 0231 96 98 6610
@kkl.textilien
@kkl.textilien

புலம்பெயர்ந்து வாழும் எமக்கு குடை என்றதும் மழைதான் ஞாபகம் வரும். தாயகத்தில் என்றால் வெய்யிலுக்கும் குடைபிடிப்பதால், வெய்யிலும் ஞாபகம் வரும்.

அதிகமான குடைகள் வெயிலுக்கு அதன் கறுப்புத் துணி வெளிறிப்போய் இருக்கும். மழை நேரங்களில் என்றால் புயல் காற்றுக்கு கம்பிகள் உடைந்தும் இருக்கும். பாடசாலையில் படிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் குடையுடன் வருவார்கள், இன்று கைத்தொலைபேசி எப்படி எங்கும், எடுத்து செல்வோமோ,அதுபோல அன்று குடைகளை எடுத்து செல்வார்கள்.

மழைக்காலம், ஆரம்பிக்கும் போதும், வெய்யில் காலம் ஆரம்பிக்கும் போதும், தெருவால் குடை திருத்துபவர்கள், கூவிக் கொண்டு செல்வார்கள். அவர்களை அழைத்து, வீட்டு முற்றத்தில் இருக்க விட்டு, கம்பி உடைந்த குடை, சீலை கிழிந்த குடை இவற்றை எல்லாம், திருத்திக் கொடுப்பார்கள். கொஞ்ச நேரத்தில் குடை இளம் குமரிபோல் மிடுக்காக இருப்பாள். குடை கட்டுபவன் கட்டி முடிந்ததும், குடையை விரித்து, சுருக்கி காட்டுவான். அவன் முகத்திலும், குடையிலும், ஒரு பெருமிதம் தெரியும். பொட்டுக்குள்ளால் இன்னும் ஒரு குடைவிரியும். அயலவர்கள் எல்லாம் உடைந்த குடைகளுடன் படையெடுப்பதும் நடக்கும்.

இப்ப தேடினாலும் குடைகட்டுபவனை கண்வெளிச்சத்திலும் காணோம். இப்ப எல்லாம் குடை உடைந்தால், கிழிந்தால், நேர குப்பைத்தொட்டிக்கு சென்றுவிடும். கடை வீதியிலும் குறைந்த விலையில் குறுகிய காலப்பாவிப்புக்கு மலிவாக குடைகள் கிடைக்கும்.

ஏன் இப்போ! போகும் போது, ஒரு குடையுடனும்,வரும்போது ஒரு குடையுடனும் வருபவர்கள், இன்று இது அதிகம். ஒன்று வைத்த இடத்தில் மறந்து விடுவார்கள், அல்லது குடை முறிந்தால் புதுக்குடையுடன் வருவார்கள். நான் பெரிதும் குடை பாவிப்பது குறைவு. எனக்கு மறதி அதிகம்.





மாதவி

# 63 ஆண்டுகளாக நெஞ்சைக் குடையும் ஒரு செல்லக் குடை



பாடசாலையில் படிக்கும் காலத்தில் எவரும் இந்த கட்டுரை எழுதாமல் விட்டு இருக்க மாட்டார்கள். அப்படி இருந்தால் துணிந்து சொல்லலாம் அவர்கள் அன்று பாடசாலைப் பக்கம் போகவில்லை என்று. அந்தக் கட்டுரை இதுதான்.

## ஒரு குடையின் சுயசரிதை

நான் இங்கிலாந்தில் பிறந்தேன். நான் மான் மார்க் இனத்தை சேர்ந்தவள். என்னை விரித்தால் அழகான, கருமை நிறத்தில் பூவாய் விரிவேன். என்னைப்பார்த்து பெண்கள் குடைவெட்டு பாவாடை அணியக் கற்றுக்கொண்டனர். என்னை எடுத்துச் செல்லும் மனிதர்களின் அந்தஸ்த்தை, என் கறுப்பு தோலில் குத்தப்பட்டு இருக்கும் இலச்சசனையும், கைப்பிடியும், கைபிடியில் உள்ள படமும் தீர்மானிக்கும்.

என் கைபிடியில் எலிசபெத்மகாராணியின் படம் பொறித்து இருந்தது. என்னை இலங்கைக்கு அனுப்ப அழகாக பொதி கட்டி கப்பலில் அனுப்பினார்கள். இருந்த இடத்திலும், செல்லும் இடத்திலும் எங்கள் ராணியின் ஆட்சி என்றமையால் நான் பயமில்லாமல் சென்றேன்.

நீண்ட பயணத்தின் பின் கொழும்பு துறைமுகம் வந்தேன். அங்கிருந்து என்னை, குதிரை வண்டியில் நகருக்கு அழைத்து சென்றார்கள். பின் அங்கிருந்து ஒரு பெரும் வணிகர் என்னையும், இன்னும் பலரையும், யாழ்பாணம் அழைத்து சென்றார்கள்.

அங்கு ஒரு கடையில் என்னை விற்பனைக்கு வைத்தார்கள். என்னைத் தேடி வந்தவர்கள் பலர் ஆசிரியர்கள். அவர்களையும் முந்தியபடி ஒரு கட்டான இளைஞன் என்னை எடுத்து, பார்த்தார், என் கைகளில் உள்ள ராணியின் படத்தைக்கண்டதும், என்னை விரித்தும் பார்க்வில்லை அகத்தின் அழகு ராணி முகத்தில் தெரிந்ததோ என்னவோ. 22 இலங்கை ரூபாய் கொடுத்து (1957ம் ஆண்டு. ) என்னை வாங்கி சென்றார்.

அவர் கையில் இருக்கும் போது திடமான இளைஞனின் பரிசத்தில், நான் பரிசுப் பொருள் என்று உணர்ந்தேன். பரிசுடன் பருத்தித்துறையில் ஒரு வீட்டு வாசலில் படலை திறக்கப்பட்டது. எதிரில் வந்த பெண்ணின் நாணத்தில் அவர்கள் புதுமணத்தம்பதிகள் என உணர்ந்தேன். ராணிகைபிடி போட்ட என்னை அவர் தன் ராணிக்கு அன்பளிப்பாக கொடுத்தார்.

1957ம் ஆண்டு. இது நடந்தது, 63 ஆண்டுகள் ஓடிவிட்டன, ஆனால் அவர்கள் என்னை ராணி போல் கவனித்தார்கள், என் தோலில் சிறு கீறல்கள் கூட இல்லை. நான் அவர்கள் குடும்பத்திற்கே நிழல் கொடுத்தேன். பிள்ளைகளும் என்னை ராணி யாகவே வைத்து காத்தனர். என்னை ஒரு போதும் மறந்தில்லை. சாதரணமாக வேறு ஒருவர் கையில் என்றால் நான் மண்ணோடு மண்ணாகி இருப்பேன். ஆனால் நான் ஒருவரின் காதல் பரிசானமையால் இன்றும் அவள் மனதில் இன்பமாக குடைந்து கொண்டு செல்லக்குடையாக இருக்கிறேன். இது குடையின் சுயசரிதை, ஆனால் உண்மையான கதை.

குடைவழங்கிய காதலன்,( கணவன்) சிறீஸ்கந்தராஜா. பெற்ற காதலி (மனைவி) லோகநாயகி. 1957ம் ஆண்டு.

### பி. குறிப்பு.

அம்மாவுக்குக் கல்யாணம் ஆனபோது (1957) அப்பா அம்மாவுக்கு இந்தக் குடையைப் பரிசாக வாங்கிக் கொடுத்தாராம். இப்போது இந்தக் குடைக்கு 63 வயதாகிறது, ஆச்சரியம்.

நானும் என் சகோதரனும் சிறு குழந்தைகளாக இருந்தபோது அம்மா எங்களை இந்த குடையின் கீழ் பள்ளிக்கு அழைத்துச் சென்றதாக அம்மா கூறினார். விலை மதிப்பற்ற பொக்கிஷம்.

**யோ.சாந்தி.**

**பருத்தித்துறை. 1.11.2023**





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்







நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# இடம் மாறும் வெளிச்சங்கள்

காலம் விசித்திரமானது! காலம் எப்படி தனது சதுரங்க விளையாட்டை நிகழ்த் துகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் சரித்திரச் சிதிலங்களைப் போய்ப் பார்த்தால் போதும். நீண்ட நெடிய வரலாறு கொண்ட சாம்ராஜ்யத்தின் கோட்டை மதில் சுவர்களில் தவளைகள் துள்ளி விளையாடும். ஓணான்கள் ஓடித் திரியும். ஒரு காலத்தில் யாரும் நெருங்கவே முடியாத கோட்டைகளின் அருகே பெட்டிக் கடைகள் டீ விற்கும் !

சரித்திரத்தின் சாய்ந்த பக்கங்களைப் புரிந்து கொள்ள அரசர்களின் அரண்மனையைப் போய்ப் பார்த்தால் போதும். இது தான் அவரது கட்டில், இது தான் அவரது வீர வாள், இது தான் அவரது கேடயம் என துருவேறிப் போன அடையாளங்களைப் பார்க்கலாம். ஒரு காலத்தில் எத்தனை தலைகளை வெட்டி வீசியிருக்கும் அந்த வாள் ! இன்றைக்கு இருபது ரூபாய் இரும்பு விலைக்குக் கூட கேட்பாரற்றுக் கிடக்கும் அது !

காலம் விசித்திரமானது ! அது தனது காய்களைக் கொண்டு தலைமுறைகளை வெட்டி வீழ்த்தியபடி பயணிக்கிறது. வீழ்த்தப்படாத ராஜா எதுவும் இல்லை. ராஜாக்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள். அரசுகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. காலப் போக்கில் அவை எதுவுமே அர்த்தமற்றதாய் போய் விடுகின்றன.

ஒரு அரசனின் தோல்வி எவ்வளவு வலி மிகுந்ததாய் இருந்திருக்கும் ? தனது சகாக்களின் இரத்தக் கறைகளில் நடந்து தோல்வியைச் சுமந்த அவனது வலி எப்படி இருந்திருக்கும். தனது இடத்தில் இன்னொருவர் அமர, தான் தலைமறைவாய் வாழ்கின்ற வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் ! காலம் சொல்லும் செய்தி ஒன்றே ஒன்று தான், எதுவும் நிரந்தரமில்லை !






ஒருவர் மேல் விழுகின்ற வெளிச்சம் அதே இடத்தில் இருப்ப தில்லை. மேடையில் விழுகின்ற வெளிச்சத்தில் கதாபாத்திரங்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். காட்சிகள் மாறிக் கொண்டே இருக்கும். இன்று உச்சத்தில் இருக்கின்ற நபர், சில ஆண்டுக ளில் கவனிக்கப்படாத நபராய் இருப்பார்.

விளையாட்டுகளில் பதக்கங்கள் வாங்கும் போது மக்கள் ஆர்ப்பரிப்பார்கள். அவர்களை உச்சத்தில் கொண்டு போய் வைப்பார்கள், ஆனால் அது நிரந்தரமல்ல. அடு த்த நபர் விரைவிலேயே அந்த இடத்தை எடுத்துக் கொள்வார். அப்போது முந்தைய நபரின் மனம் உடைபடும். தனது காலம் முடிந்து விட்டது என்பதை ஏற்றுக் கொள்வது தான் இருப்பதிலேயே சிரமமான காரியம்.

எம்.எஸ்.வி கோலோச்சிய காலம் கடந்து விட்டது, இசை ஞானியின் காலம் தேய்ந்து விட்டது, இசைப்புயலின் காலமும் இப்போது கரை கடந்து விட்டது, இப்போது அனிருத்களின் காலம். அதுவும் வெகு விரைவிலேயே விலகி இன்னொருவரின் ஆளுமை ஆரம்பமாகும்.

நடிகர்களும் அப்படியே ! தன் இடத்தை நிரப்ப இன்னொரு வில்லன் வருவான் என நம்பியார் நினைத்திருக்க மாட்டார். தன்னை விடப் பெரிய ஒரு ஹீரோ வருவார் என எம்.ஜி.ஆர் நினைத்திருக்க மாட்டார். என்னைப் போல் நடிக்க இன்னொருவன் வருவான் என நடிகர் திலகம் நினைத்திருக்க மாட்டார். ஆனால் எல்லாமே மாறிப் போய்விட்டன. புதிய வெளிச்சத் தளங்களில் புதியவர்கள் வந்து குடியேறிவிட்டார்கள்.

தன்னை விட உயர்ந்த இலக்கியப் படைப்பை எழுத இன்னொருவர் பொறந்து தான் வரணும் என நினைத்திருந்த பல ஜாம்பவான்களின் நூல்கள் பழைய புத்தகக் கடைகளில் பேப்பர் விலைக்குக் கிடைக்கின்றன. இன்னொருவர் அந்த இருக்கையில் அமர்ந்து காலமாற்றத்துக்கான இலக்கியத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்.

காலம் விசித்திரமானது ! அதைக் கற்றுக் கொண்டவர்கள், காலத்தை எப்படி வெல்லலாம் என்பதைக் கண்டு கொள்வார்கள்.



காலத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள், தங்களுடைய வெளிச்சம் இறந்த காலத்துக்கு இடம் பெயரும் போது தாங்களும் உணர்வுகளால் இறந்து விடுகிறார்கள்.

காலத்தைக் கற்றுக் கொண்டவர்கள் தங்கள் மீது வெளிச்சம்

17 ஆம் பக்கம் பார்க்க...




# இடம் மாறும் வெளிச்சங்கள்

விழுந்து கொண்டே இருக்க வேண்டும் என நினைப்பதில்லை. வெளிச்சம் இருக்கின்ற காலத்தில் செய்கின்ற செயல்கள்,வெளிச்சம் விலகிய காலங்களில் தனது பெயரை உரைக்க வேண்டும் என நினைப்பார்கள். ஒரு மனிதனை நாம் நினைவில் கொள்வதற்கு அவனது பெயரோ, தோற்றமோ, உருவமோ முக்கியமில்லை. அவன் விட்டுச் சென்றது என்ன என்பதே போதுமானது ! சேக்ஷ்பியர் குட்டையா, நெட்டையா என யாரும் கவலைப் படுவதில்லை ! இலக்கியம் பேசுகிறது. தொல்காப்பியர் கருப்பா வெள்ளையா என யாரும் சிந்திப்பதில்லை அவரது இலக்கணம் பேசுகிறது ! வெளிச்சம் நம் மீது விழும்போது நாம் என்ன செய்தோம் என்பது நம்மை நிர்ணயிக்கிறது !

அதே போல, வெளிச்சம் நம்மீது விழுகின்ற காலத்தில் நாம் யாரை கவனித் தோம் என்பது காலத்தின் பக்கங்களில் குறிக்கப்படுகிறது. ஒரு ஹிட்லர் என்ன செய்தான் என்பதை வரலாறு இரத்தக் கறைகளால் குறித்து வைத்திருக்கிறது. அதன் குருதி வாசனை விலகப் போவதில்லை. அன்னை தெரசா என்ன செய்தார் என்பதையும் அதே வரலாறு குறி த்து வைத்திருக்கிறது. அதில் அன்பின் வாசனை நிரம்பியிருக்கிறது. காலங்கள் கடந்த பின்னும் அதிலிருந்து வாழ்வின் அர்த்தத்தைப்



பெற்றுக் கொள்ள முடிகிறது.

வெளிச்சம் நம் மீது விழுகின்ற காலத்தில் நாம் எப்படி இருந்தோம் என்பதும் காலத்தின் கழுகுக் கண்களில் விழுகிறது. பலருக்கு புகழ் வெளிச்சம் கண்களை கூசச் செய்கிறது. அவர்களுக்கு எதிரே இருப்பவர்கள் தெரிவதில்லை. பின்னால் இருப்பவர்கள் தெரிய வேண்டுமென அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் அந்த வெளிச்சத்தின் கிளுகிளுப்பில் கிறங்கிப் போய்க் கிடக்கிறார்கள். நாம் வெளிச்சத்தில் வாழ்கின்ற காலத்தில் தாழ்மையுடன் இருந்தால், பணிவுடன் இருந்தால் வெளிச்சம் இல்லாத காலத்திலும் மனித இதயங்களில் நாம் வெளிச்சம் வீசுபவர்களாக இருப்போம்.

இன்றும் பல்வேறு பழைய நடிகர்கள் அவர்களுடைய பண்பினாலும், குணத்தினாலும் பாராட்டப்படுகிறார்கள். பலர் அவர்களுடைய பணிவினால் புகழப்படுகிறார்கள். கர்வம் கொண்டு அலைந்த எவரையுமே மனுக்குலம் உயர்வான இடத்தில் வைப்பதில்லை. அப்படி வைத்தாலும் அது நிலைப்பதில்லை. ஒற்றை மூங்கிலின் உச்சியில் அமர்கின்றதைப் போல தான் அந்த வாழ்க்கை. நமது பக்கம் காற்று அடிக்கும்போது, நாம் பணிவின் இருக்கையில் அமரவேண்டும் !

மூன்று விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் ! ஒன்று, எதுவும் நிரந்தரமில்லை ! வெளிச்சம் என்பது நமக்கு மட்டுமானதல்ல. இந்த உலகில் நமது வாழ்க்கை கொஞ்சம் காலம் தான். அதில் வெளிச்சப் பரப்பில் வாழ்வது மிகக் கொஞ்சம் காலம் தான். அந்த உண்மையை ஒவ்வொரு கணமும் நினைவில் கொள்ள வேண்டும். அந்த நினைப்பு இருந்தால் வெளிச்சத்தில் இருக்கும் போது ஆடவும் மாட்டோம், இருளில் கிடக்கும் போது வாடவும் மாட்டோம்.

இரண்டாவது, வெளிச்சப் பரப்பில் இருக்கும்போது சக மனிதருக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இன்னொருவரைத் தூக்கி விடுவதோ, இன்னொருவரின் தேவையை நிறைவேற்றுவதோ, இன்னொருவருக்கு வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுப்பதோ எதுவாகவும் இருக்கலாம். அது நமது வெளிச்ச வாழ்க்கையை இன்னும் அழகானதாக்கும்.

கடைசியாக, வெளிச்சத்தில் வாழும் போது தாழ்மையும் பணிவும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு தூரம் உயர செல்கிறானோ, அந்த அளவுக்கு அவனுடைய இதயம் தாழ்மை அணிய வேண்டும். எனக்கு இறைவன் இந்த இடத்தைத் தந்திருப்பது என் திறமையால் அல்ல,என் மூலமாய் பிறர் பயன்பட இறைவன் விரும்புகிறார் என்று சிந்திக்க வேண்டும். அப்போது நமது குணாதிசயம் சிறப்பாக இருக்கும். மனிதம் செழிக்கும் !

வெளிச்சத்தில் வாழ்வது தனித்துவமானது வெளிச்சத்தில் வாழ வைப்பது மகத்துவமானது !

---

# First Audio பாமுகம் வழங்கிய பொன்மாலைப்பொழுது 431



06.10.2023 வெள்ளிக்கிழமை எசன் நகரில் பாமுகத்தின் பொன்மாலைப் பொழுது 431 வது நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் பாமுகத்தில் தினம் ஒரு காணொளியாக தொடர்ச்சியாக தமிழ் வாசிப்பு அரும்பு 1000 செய்து சாதனை படைத்த செல்வன் நகுல் துரையரங்கன், செல்வி அட்சியா சாந்தரூபன் இருவருக்கும் வாசிப்பாயிரம் உலகத் தமிழ் சாதனை என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்கள்.

இங்கு பிறந்து தமிழ் கற்று கற்பிக் கின்றவர்களுக்கு துறை சார்ந்த ஆளுமைக்காகவும்,அடுத்த சந்ததி தமிழ் மொழி வளமூட்டல் சார்ந்தும் ஆற்றும் பணி களை கௌரவித்து Excellent Service Award என்ற சான்றிதழ் வழங்கி மூவர் கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் இந் நிகழ்வில் 40 மேற்பட்ட பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பறை இசை,கரகம், பாடல்கள், நடனங்கள், பட்டிமன்றம், பெரியவர்களின் உரைகள், வாழ்த்துகள், பரிசுகள் என கலகலப்பாகவும் காத்திரமாகவும் இவ் நிகழ்வு நடைபெற்றது. லண்டன் தமிழ் வானொலி, பாமுக இயக்குனர்கள் திரு திருமதி நடாமோகன் அவர்கள் இவ் நிகழ்வில் லண்டனில் இருந்து வந்து கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

படங்கள்: நந்தபாலன் | செய்தி:சாந்தி துரையரங்கன்.










அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


SIVINS
FOLLOW US NOW
#SHIVAVINOBANS
WE ARE Tamil
வங்கிச்சேவை
மற்றும் மேலும் பல
YouTube மூலமும்
@vinothathoni
WHAT WE DO (OUR SERVICES)
01 - வேலைவாய்ப்பு
02 - வீடு வாங்க விற்க
03 - தனியார் / தொழில் கடன்
04- காப்புறுதி (Leben, Sach, Kfz und Mehr)
05- மின்சாரக்கட்டணம்
06- மேலும் பல சேவைகளிற்கு தமிழில் ஆலோசனை பெற
+49 179 72 67895
www.sivins.com



# இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள்

கு.வாமினி (யேர்மனி)

அகிலமெல்லாம் போற்றும் பிறந்தநாள் "இயேசு கிறிஸ்து"வின் பிறந்த நாள். உலக மக்கள் செய்யும் பாவங்களுக்கு விடுதலை கொடுக்கும் படி பிறந்தவர் தான் எங்கள் "இயேசு கிறிஸ்து".

"இயேசு" தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று மத்தேயு 1:21 வசனம் சொல்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். உயிர் வாழ்ந்தாள் நடைப்பிணம். மரித்தாள் நரக அக்கினி பாவத்தினால் வரும் தீமைகளை பார்ப்போமானால்: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள்,வெறிகள்,களியாட்டுகள் என்று கலாத்தியர் 5:19-21 எழுதியிருப்பதை வாசிக்கின்றோம்.

இப்படிப்பட்ட பாவங்களை மனிதர்கள் அறிந்தும் அறியாமலும் செய்கின்றார்கள். இதனால் எல்லா வசதிகள் இருந்தாலும் இருதயத்தில் சந்தோஷம் சமாதானம் இல்லாமல் இருளில் வாழ்கின்றார்கள். இப்படியாக இருளில் வாழ்கிற மக்களுக்கு விடுதலை கொடுக்கும் படி வந்தவர் பிறந்தவர்தான் எங்கள் "இயேசு கிறிஸ்து" தேவ வார்த்தை இருளில் நடக்கிற மக்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது என்று ஏசாயா 9:2 வசனத்தில் வாசிக்கின்றோம்.

இதனால் தான் பரிசுத்த ஆவியினால் மாமிசத்தோடும் இரதத்தோடும் இந்த பூமியில் வந்து உதி த்தார் (மத்தேயு 1:20). இயேசு சொன்னார்: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான். அப்பொழுது அவர்களுக்குள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம் விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், வீண் புகழ்ச்சியை விரும்பாமல், ஒருவரையொருவர் கோபம்மூட்டாமல், பொறாமை கொள்ளாமல், உன்னில் அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூர் என்று வார்த்தை சொல்கிறது. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் (யோவானா 17:17).

அகிலமெல்லாம் "இயேசு கிறிஸ்து" வின் பிறந்தநாளை மகிழ்வதற்கு மூலகாரணம் பாவத்தை மன்னிக்கின்றவர் அவரை தேடி செல்வோர்க்கு ஆம் என்றும் ஆமேன் என்றும் அற்புதம் அதிசயம் செய்தவர் செய்து கொண்டிருப்பவர்.



# காலையிலா மாலையிலா நாம் உயரம் அதிகமாக இருப்போம்?



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

எனது பெயர் நிரோஷன்! காலையிலும் எனது பெயர் நிரோஷன் தான், சாயங்காலத்திலும் எனது பெயர் நிரோஷன் தான். ஆஹா என்னடா வழக்கம் போல் குழப்ப ஆரம்பித்து விட்டேனா? பொதுவாக சில விஷயங்கள் மாறாது. காலையில் எப்படி இருக்குமோ, அதே போல் தான் சாயங்காலத்திலும் இருக்கும். சரி சரி இதை விடுங்கள், உங்களிடம் நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன், அதற்குப் பதில் சொல்லுங்கள் பார்ப்போம். உங்கள் உடலின் உயரம் என்ன? இந்தக் கேள்விக்கு நீங்கள் ஒரே ஒரு பதிலைச் சொல்லிவிட்டு உங்கள் வேலையைப் பார்ப்பீர்கள். ஏனென்றால் இந்தக் கேள்வியில் அப்படி ஒரு விசேஷமும் கிடையாது, சரி தானே? நண்பர்களே, இதே கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டால், அதற்கு நான் இரண்டு பதில்களைக் கூறுவேன். காலையில் நான் 175 சென்டிமீட்டர், சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டர் இருப்பேன் என்று கூறிவிட்டு உங்களைக் குழப்பிவிடுவேன். இது என்னடா முட்டாள் தனமான பதில் என்று நினைத்தால், தொடர்ந்து படியுங்கள், ஏனென்றால் இதற்குப் பின்னால் ஒரு அறிவியல் உண்மையே இருக்கிறது.

உங்களால் நம்ப முடியாத இந்த விஷயத்தை வேண்டும் என்றால் நீங்களே சோதித்துப் பாருங்கள். காலையிலும், சாயங்காலத்திலும் உங்கள் உயரத்தை ஒரு முறை அளந்து பாருங்கள். வாயைப் பிளந்துகொண்டு நிற்பீர்கள். நாம் சாயங்காலத்தில் விடக் காலையில் சில சென்டிமீட்டர்கள் உயரமாகத் தான் இருப்போம். அதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாக நமது முள்ளந்தண்டு எலும்புகளால் மட்டும் அமைக்கப் படவில்லை. அதில் intervertebral discs என்று அழைக்கப்படும் முள்ளெலும்பிடையான வட்டுகள் காணப்படுகின்றன. இந்த வட்டுகள் எலாஸ்டிக் (elastic) பஞ்சுகள் போன்று வளைந்து நெளிந்து நமது உடல் அசைவுக்கு மிக முக்கிய காரணமாக இருக்கின்றன. நாம் இரவில் தூங்கும் போது பஞ்சு போன்ற இந்த வட்டுகள், நமது உடலில் உள்ள நீர்மத்தை (liquid) உறிஞ்சி எடுத்து விடுகின்றன. பின்னர் காலையில் நாம் தூக்கம் கலைந்து எழுந்ததும், உதாரணத்திற்கு என்னை எடுத்துக் கொண்டால், நான் காலை எழுந்து நிற்கும் போது எனது உடலின் உயரம் 175 சென்டிமீட்டராக இருக்கும்.

காலையில் 175 சென்டிமீட்டர் இருக்கும் நான் எப்படி சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டருக்குக் குறைந்து விடுகின்றேன். இது புரிவதற்கு முதலில் நாம் காலையில் எழுந்த பின், நடைபெறும் இரண்டு விஷயங்களை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக நாம் நடந்து திரிந்து, விளையாடி, வேலை செய்யத் தொடங்கி விடுகின்றோம். இரண்டாவதாக நாம் நமது இரு கால்களிலும் நிற்கத் தொடங்கியதும், நமது முள்ளந்தண்டில் புவி ஈர்ப்பு விசை செலுத்தப் படுகிறது. இந்த இரு விஷயங்களாலும் அந்த வட்டுகளில் உறிஞ்சி எடுக்கப்பட்ட நீர்மம் நேரம் போகப் போக கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றப் படுகின்றது. அதன் விளைவாக நமது முள்ளந்தண்டின் உயரம் குறைந்து விடுகின்றது. அத்துடன், நமது உடலின் உயரமும் குறைந்து விடுகின்றது. எனவே காலையில் 175 சென்டிமீட்டர் இருக்கும் நான் நேரம் போகப் போக சாயங்காலத்தில் 174 சென்டிமீட்டருக்குக் குறைந்து விடுகின்றேன். இது தான் இந்த மர்மமான விஷயத்துக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் உண்மை ஆகும்.




## வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில்
ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம்
உள்ள சைவ, வேளாளர் 29 வயது
நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற
பட்டதாரி மணமகன் தேவை.
தற்போதைய பாடசாலையிலேயே
தொழிலைத் தொடரக் கூடிய
தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்:
4915774318528



மணமகன் தேவை!

Wirtschaftsingenieur
பிறாங்பேட்டில்
வேலை செய்யும் நற்குணமுள்ள
34 வயதுடைய சைவ
வேளாளர் குல பெண்ணுக்கு
தற்போதய இடத்தில் வேலையை
தொடரக்கூடிய பட்டதாரி
மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு பெற்றோர்:
4915774318528



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery







தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425


அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்






தேடல் என்பது உலகப் பரப்பிலே விலங்குகள், ஆதி மனிதன் என்று தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தொடஉந்து கொண்டே தான் இருக்கிறது. உணவு, உடை, உறையுள் என்று தேவைகள் தொடஉகின்ற போது அறிவுதான் அனைத்துக்கும் அடிப்படையாகக் காணப்படுகின்றது. அறிவுத் தேடலை விரிவுபடுத்த வாசிப்பு மனிதனுக்கு அவசியமாகின்றது.

பாடசாலைக்கல்வி போதும் என்பவர்களுக்குப் பாடசாலைக்கல்வியின் போதும் தேடல் அவசியம் என்னும் உண்மை தெரிய வேண்டும்.

> குருட்டினை நீக்கும்
> குருவினைக் கொள்ளார்
> குருட்டினை நீக்காக்
> குருவினைக் கொள்வார்
> குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
> குருடும் குருடும் குழிவிழும் ஆறே

முறையான ஆசிரியர்கள் கிடைக்காத பட்சத்தில் பாடவிதானத்திலே எமக்குரிய தெளிவைப் பெறுவதற்கு மேலதிக வாசிப்பு ஒவ்வொருவருக்கும் அவசியமாகின்றது.

அந்த வாசிப்புக்கு சிறந்த நூல்கள் பயனுடையதாக இருக்கின்றன. ஒரு நூல் எழுத முற்படுகின்ற போது எழுத்தாளன் ஏன் எழுதுகின்றோம், என்ன எழுதுகின்றோம், யாருக்கு எழுதுகின்றோம் என்ற 3 விடயங்களைக் கவனத்தில் வேண்டும். இந்த நூலை உலகத்துக்குத் தருகின்ற போது அதனால், இந்த உலகம் என்ன பயனை அடைகின்றது என்ற அறிவு எழுத்தாளனுக்கு அவசியம். வாசகர்கள் இதன் மூலம் என்ன கற்றுக் கொள்ளுகின்றார்கள், எந்த சமூகத்துக்கு இப்படைப்பு சென்றடைய வேண்டும் என்ற தெளிவை முன் வைத்தே கணனியைத் திறக்க வேண்டும். கைகள் தட்டச்சில் பதிய வேண்டும்.

நூல்கள் ஒரு மனிதனை முற்றிலும் மாற்றியமைக்கும். வரலாற்று நூல்கள் எம்மைச் செதுக்கும். தான் ஒரு விலங்கு என்பதை மறுப்பதற்கு மனித இனம் போராடிக் கொண்டிருக்கின்றது. அதற்கு வாசிப்பு அவசியமாகின்றது. நூல்கள்

## ஒரு நூல் வாசிக்கப்படாது அலுமாரியை அலங்கரிப்பது ஒரு நூலகத்தை எரிப்பதை விடக் கொடுமையானது!

மூலமாக மூளை தகவல்களைச் சேகரிக்கின்றது. பெற்ற தகவல்களை மதிப்பீடு செய்கின்றது. உதாரணமாக சிக்காக்கோவில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றிய பின் ஒரு ஆங்கிலப் பெண்மணி தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்டதான ஒரு செய்தியை வாசித்திருக்கின்றேன். ஆனால், அது தவறான செய்தி என்பதை இன்னுமொரு புத்தகம் காலக் கணிப்பீட்டுடன் கூறியது. நோபல் பரிசு பெற்ற அனடோல் பிரான்சுக்கும், அழகு நிறைந்த நாட்டியத் தாரகையான ஐசடோரா டங்கனுக்கும் இடையே 1923 இல் நடைபெற்ற சந்திப்பில் ஐசடோ பிரான்சிடம் "என்னுடைய அழகையும் உங்களுடைய மூளையையும் கொண்ட ஒரு குழந்தையைக் கற்பனை செய்து பாருங்கள் என்றாராம். அதற்கு பிரான்ஸ் " அதுசரி என்னுடைய அழகையும் உங்களுடைய மூளையையும் கொண்ட ஒரு குழந்தையைக் கற்பனை செய்து பாருங்கள் என்றாராம். இவ்வாறு பிரான்சுக்கும் ஐசடோக்கும் இடையிலே நடந்த மரபியல் தன்மையை மேம்படுத்துவது சம்மந்தமாக நடந்த உரையாடல் சுவாமி விவேகானந்தருக்கும் ஆங்கிலப் பெண்மனிக்கும் இடையிலான உரையாடலாக வரலாறு திரிக்கின்றது. இவ்வாறு வரலாறு உண்மையைப் பொய்யாக்கும் பொய்யை உண்மையாக்கும். இதற்கு அகன்ற ஆழமான வாசிப்பு எமக்குத் துணை வருகின்றது.

நல்ல அறிவார்ந்த நூல்களை வாசிப்பது மனிதனின் கருமையப் பதிவிலே மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. மனித மனங்களிலே மாற்றம் ஏற்படுகின்ற போது கருமையம் துப்பரவு செய்யப்படுகின்றது. ஆத்மா சீரமைக்கப்படுகின்றது. தன்னைச் சுற்றி நல்ல சிந்தனைகளே வளருகின்றன. ஆத்மா சந்ததி முழுவதிலும் நன்மையை உருவாக்குகின்றது. எனவே நூல்கள் மனங்களை துப்பரவு செய்யவும் சிந்திக்கவும் செய்யும் என்பது முற்றிலும் உண்மை. ஒரு நூலைப் படிக்கும் முன் வாசகன் எப்படியான மனநிலையில் இருப்பானோ அந்த நூலைப் படித்து முடித்த பின் வேறொரு கோணத்திலான மனநிலைக்கு அவன் மாறிவிடுவான். அவ்வாறான சக்தி சிறந்த நூல்களுக்கு இருக்கிறன. ஒரு சிந்தனையில் இருந்து வேறு ஒரு சிந்தனைக்கு வாசகனைக் கொண்டு செல்லும் புரட்சியை நூல்கள் செய்திருக்கின்றன.

ஆனால், வெளிவருகின்ற நூல் வெளியிடுவதற்கு முன் செவ்விதழ் ஆக்கம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது. எங்களுடைய கண்களே எங்களால், நம்பமுடியாது. விரைவாகத் தட்டச்சில் விரல்கள் பதிகின்ற போது எழுத்துக்கள் மாறுபடலாம். எழுத்துப்பிழைகள் அறியாமலே வந்துவிடலாம். கருத்துப் பிழைகள் எடுத்துக் கொண்ட பொருளில் பிழைகள் எனத் தவறுகள் தாங்கி நூல்கள் வெளிவரக்கூடாது. அதனால், அந்தந்தத் துறையில் துறைபோனவர்களின் மூலமாக் செவ்விதழ் ஆக்கம் செய்யப்பட வேண்டும். இருவர் அல்லது மூவர் இப்பணியை மேற்கொள்ளும் போது நூலின் தரம் மேலும் உயர்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகும். அதனாலேயே அணிந்துரை என்னும் பகுதி நூல்களில் இடம்பிடிக்கின்றது.

வாசிப்பை நூல் வடிவிலும், மின்னூல் வடிவிலும் நாம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆனாலும், கையிலே நூல்களை வைத்து வாசிப்பதற்கும் கணனியிலும், கைத்தொலைபேசியில் வாசிப்பதற்கும் இடையிலே பாரிய வேறுபாடு இருக்கின்றது. நூல்கள் வாசகர்களை நோக்கமாகக் கொண்டே வெளியீடு செய்யப்படுகின்றன. வாசகர்களின் ஆவலைத் தூண்டும் வகையிலே அதனுடைய அமைப்பு அமைந்திருந்தாலேயே வாசிக்கும் திறனும் வாசகர்களுக்கு அதிகரிக்கும்.

தற்போது நூல்கள் எழுதுபவர்கள் தொகையும் நூல்களின் தொகையும் அதிகரித்து விட்டன. ஆனால், தொகைக்கும் தகுதிக்கும் இடையிலே வாசகர்கள் போராட வேண்டிய சூழ்நிலை தற்போது காணப்படுகின்றது. எது யாருக்குத் தேவையோ அதனையே தேடிச் செல்லும் விலங்கு. பசு புல்லுத்தான் உண்ணும் இறைச்சியைத் உண்ணாது. புலி இறைச்சிதான் உண்ணும் புல்லை உண்ணாது.

28 ஆம் பக்கம் பார்க்க...








# இயேசுவின் பிறப்பும் மனிதத்தின் சிறப்பும்

சேவியர் தமிழ்நாடு

இயேசுவின் பிறப்பைக் காலம் காலமாக மக்கள் கொண்டாடிக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடுகிறார்கள். சிலருக்கு கிறிஸ்து பிறப்பு என்பது பாடல்களைப் பாடி மகிழும் காலம். சிலருக்கு நன்றாக உண்டு மகிழ்ந்திருக்கும் காலம். சிலருக்கு குடும்பத்தோடு வெளியூர் சென்று பொழுதைக் கழிக்கும் விடுமுறைக் காலம். சிலருக்கு அலங்காரங்களோடு ஆலயத்துக்குச் செல்லும் காலம். சிலருக்கு நட்சத்திரங்கள் தொங்கவிட்டு, குடில் அமைத்து, கிறிஸ்மஸ் மரங்களை வைத்து மகிழும் காலம்.

விழாக்காலங்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக வசீகரிக்கின்றன. எந்த ஒரு விழாவையும் அதன் முழுமையான புரிதலோடு கொண்டாடுவதே சிறந்த வழியா கும். அதற்கு அந்த விழா என்ன சொல்கிறது? அதன் உண்மையான அர்த்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

கிறிஸ்து பிறப்பு என்பது, இயேசுவின் பிறந்த நாள் விழா ! ஒரு பிறந்த நாள் விழாவை ஏன் உலகமே கொண்டாட வேண்டும்? காரணம் பிறந்த நபர் அப்படிப்பட்டவர். அவர் சிரமேற்கொண்ட பணி அப்படிப்பட்டது. இயேசு என்பதற்கு பொருள் விடுவிப்பவர் என்பது தான். இயேசுவின் வருகைக்கும், வாழ்க்கைக்கும் இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று உடல் சார்ந்தது, இன்னொன்று ஆன்மா சார்ந்தது. இயேசு தனது பணியை இரண்டு வகைகளிலும் செயல்படுத்தினார். ஒன்றை விடுத்து இன்னொன்றை மட்டும் எடுப்பவர்கள் இயேசுவின் பணியை அரைகுறையாய் அறிந்து கொண்டவர்கள் தான்.

இயேசுவின் வருகையின் முக்கியமான நோக்கம் மனிதநேயமே ! மனிதன் மீது கொண்ட அன்பினால் இயேசு மனிதனாகப் பிறந்தார். மனிதனாய் வளர்ந்தார். மனித பலவீனங்களோடு பயணித்தாலும் அதையெல்லாம் இறையருளால் மேற்கொண்டார். மனித நேயத்தை மறுதலிக்கின்ற எந்த ஒரு மனிதனும் விண்ணகம் நுழைய முடியாது என அடித்துச் சொன்னார்.

இன்னும் சொல்லப் போனால் இரண்டு பாவங்களை மிக முக்கியமானவையாக இயேசு சொன்னார். ஒன்று ஏழைகளை உதாசீனப்படுத்துவது, அவர்களுக்கு உதவாமல் இருப்பது, அவர்களுக்கு ஆறுதல் அளிக்காமல் இருப்பது. இன்னொன்று பிறரை மன்னிக்க மறுப்பது. இந்த இரண்டு பாதைகளிலும் நடப்பவர்கள் நிச்சயம் விண்ணகம் சென்று சேர்வதில்லை என இயேசு அடித்துச் சொன்னார்.

இயேசுவின் வருகை, அன்பைப் பிரகடனப் படுத்தியது ! தன்னைப் போல பிறரை நேசிப்பதே இறைவனின் கட்டளை என்றார். தன்னைப் பின்பற்ற வேண்டுமெனில் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றார். பகிர மறுக்கும் மனம் இருப்பவர்கள் பரமனை நெருங்க முடியாது. செல்வந்தன் விண்ணகம் நுழைவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் என்றார். கிறிஸ்மஸ் சொல்லும் இன்னொரு பாடம் தாழ்மை ! இயேசு பிறந்தபோது மாடுகள் உணவு உண்ணும் தீவனத் தொட்டியில் தான் அவர் கிடத்தப்பட்டார். அந்த அளவுக்கு அவரது வருகை தாழ்மையின் தளத்தில் இருந்தது. எளிமையான உடையுடன், எளிய பெற்றோருக்குப் பிறந்தார் இயேசு.


இயேசுவின் வருகை நமக்குச் சொல்வது, நாம் மனித நேயத்தை சிரமேற்கொண்டு தீவிரமாய் செயலாற்றுபவர்களாக இருக்க வேண்டும். மதமா, மனிதமா எனும் கேள்வி வந்தால் தயங்காமல் மனிதம் என்று சொல்ல வேண்டும். ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், நிராகரிக்கப்பட்டோர் இவர்களின் சார்பாய் நிற்க வேண்டும். போன்ற வாழ்க்கை விழுமியங்களைத் தான். இவற்றை மறுதலிக்கும் போது நாம் இயேசுவின் வருகையை எதிர்க்கிறோம்.

பாட்டுப் பாடிக் கொண்டே இருப்பதையோ, அலங்காரங்களில் அமிழ்ந்து கிடப்பதையோ, நண்பர்களோடு மகிழ்ந்திருப்பதையோ, ஆலய

28 ஆம் பக்கம் பார்க்க...








# ஒரு மெழுகுதிரியில் பலகோடி மதிப்பான Business ஆ?

சிவவினோபன் (யேர்மனி)

காலக் கட்டத்தில் மெழுகுதிரிகோட்டு வரைபட அமைப்பினை அவதானிப்பது எப்படி என்று, இன்று பார்க்க இருக்கின்றோம்.

கடந்த டிரேடிங் பற்றிய கட்டுரையின் வரவேற்புக்கு மிகுந்த நன்றிகள். இன்று அந்த டிரேடிங்கின் இரண்டு அடிப்படை அத்திவாரங்களை கற்றுக் கொள்ளப் போகின்றோம். இந்த அத்திவாரங்கள் உறுதியாக இருந்தால், அடுத்து அதற்கு மேல் கட்டடங்கள் கட்ட இலகுவாக இருக்கும். முதலாவது அத்திவாரம் மெழுகுதிரி கோட்டு அட்டவணை வரைபடம். இதை ஆங்கிலத்தில் Candlestick Chat என்று சொல்லப்படும். இதை மட்டும் தெளிவாக தெரிந்து கொண்டாலே போதும் நாம் டிரேடிங்கை முழுமையாக புரிந்து கொண்டு விட்டோம் என்று அண்ணளவாக சொல்லலாம். ஏனென்றால் இதுதான் ஆரம்ப அத்திவாரம்.

இதோ இங்கு தெரிகின்ற புகைப்பட த்தில் இருக்கின்ற இந்த பச்சை சிவப்பு மெழுகுதிரிகள் போன்று இருக்கின்ற இந்த அட்டவணையை தான் நான் கூறுகின்றேன். இது கருப்பு வெள்ளை படத்தில், வெள்ளை கருப்பு மெழுகுதிரிகளாகவும், வர்ணப் படத்தில், பச்சை சிகப்பு மெழுகுதிரிகள் ஆகவும் இருக்கின்றது. முதலில் வர்ணத்துடைய அர்த்தத்தை பார்ப்போம். பச்சை அல்லது வெள்ளை நிற மெழுகுதிரி உடைய அர்த்தம், அந்த மெழுகுதிரி மேல் நோக்கி வளர்கின்றது என்று அர்த்தம். இதை வணிக ரீதியாக பார்த்தோம் என்றால், ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி மேல் நோக்கி இருக்கின்றது, அந்த நிறுவனம் முன்னேறிக் கொண்டு இருக்கின்றது என்பதை பச்சை அல்லது வெள்ளை நிற மெழுகுதிரிகள் குறித்து காட்டுகின்றது. இதுவே கருப்பு அல்லது சிகப்பு நிற மெழுகுதிரி உடைய அர்த்தம், அந்த நிறுவனம் ஏதோ ஒரு காரணத்தால், கீழ்நோக்கி இறங்கி கொண்டிருக்கின்றது, அதாவது அந்த நிறுவனத்தின் வளர்ச்சி குறைவடைந்து கொண்டிருக்கின்றது, மக்கள் மத்தியில் அந்த நிறுவனத்தின் நம்பிக்கை தன்மையோ அல்லது வணிக ரீதியாக அந்த நிறுவனத்தின் வருமானமும் குறைந்து கொண்டிருக்கின்றது என்பதை குறித்து காட்டும் விதமாக இந்த மெழுகுதிரிகள் அமைந்திருக்கின்றது. இந்த அடிப்படை விடயம் கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும்.

இந்த அடிப்படை விடயம் புரிகின்றதா? இப்போது அந்த மெழுகுதிரி கோட்டு அட்டவணையில், ஒரு மெழுகு திரியை எடுத்து அதன் முழுமையான அர்த்தத்தை புரிந்து கொள்வோம். உதாரணத்திற்கு இந்த பச்சை மெழுகு திரியை எடுத்துக் கொண்டால், இதில் நான்கு பகுதிகள் இருக்கின்றது அதை விரிவாக புரிந்து கொள்வோம். முதலில் மெழுகு திரியின் O (Open) என்று போடப் பட்டிருக்கின்ற இந்தப் பகுதி, இதுதான் மெழுகு திரி எப்போது ஆரம்பம் ஆனது என்பதை குறித்து காட்டுகின்றது. உதாரணத்திற்கு ஒரு நிறுவனத்தின் பங்கு உடைய விலை 100 ரூபாயில் ஆரம்பித்து வளர்ந்து கொண்டே செல்கின்றது என்பதற்கான அர்த்தம் பச்சை நிற மெழுகு திரியாக இருக்கின்றது என்பது. அது வளர்ந்து கொண்டே சென்று காலகட்டம் ஐந்து நிமிடங்கள் என்று எடுத்துக் கொண்டோம் என்றால், மூன்றாவது நிமிடத்தில் 150 ரூபாயாக மாறி, அதன்பின்பு அது விழுந்து கொண்டு வந்து நான்காவது நிமிடத்தில் 50 ரூபாயாக மாறி, மீண்டும் எழுந்து கொண்டு வந்து ஐந்தாவது நிமிடத்தில் 120 ரூபாயில் முடிந்திருந்தால், பாருங்கள் O (Open) என்று போடப்பட்டிருப்பது ஆரம்ப புள்ளி C (Close) என்று போடப்பட்டிருப்பது

30 ஆம் பக்கம் பார்க்க...




## வெற்றிமணியின் இதய அஞ்சலி!

### அமரர் திருமதி பத்மாவதி தில்லையம்பலம்

குரும்பசிட்டி கிராமத்தை பிறப்பிடமாகவும் அராலி மத்தியை புகுந்த இடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி தில்லையம்பலம் அவர்கள் கடந்த 12.11.2023 லண்டனில் தனது 95 வது அகவையில் காலமானார்.

அன்னாருக்கு வெற்றிமணியின் இதய அஞ்சலி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றனர்

பிள்ளைகள் சகோதரர்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

2024 நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

Aadaa Finance GmbH

Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)

Eidgenössische finanzmarktaufsicht Nr.35302

Fachmann Für Versicherung & Vorsorge

Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland



aaDaa Finance 0798000100



079 8000 100 | arulnages@yahoo.com

finma :34598 cicero :25605

மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன் நாதஸ்வர இன்னிசைச் செல்வன்

N.K.Raguraman

Dresdener Str.6 50126 Bergheim Germany





Tel: 0049 157 89 15 95 71

0049 2271 670236 | 0049 160 91146240

# எனக்குத் தொலைந்து போகப் பிடிக்கும்



எப்பொழுதெல்லாம் தொலைந்து விடத் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் மலைகளுக்குச் சென்றுவிடுவேன். மலைகளின் கம்பீரம்,காலத்தின் இழுவையைப் பொருட்படுத்தாத அவற்றின் பொறுமை, அவை அரவணைத்துக்கொண்ட அத்தனை ஜீவராசிகளின் அசைவுகளையும், சப்தங்களையும் உள்வாங்கிக் கொண்டு அவை காக்கும் மௌனம் என்று பல உணர்வுகளைக் கடத்தும் அற்புதம் மலைகள்.

எனக்குத் தொலைந்து போகப் பிடிக்கும். சில நேரங்களில் எங்காவது சென்று தொலைந்து போவேன். அது ஒரு அந்நிய மனநிலையைக் கொடுக்கும், சற்று நேரம் அமைதி, சற்று நேரம் பதட்டம், பின் ஒரு தேடல், ஆசுவாசம் என்று கலவையான மனநிலை அது.அப்படியல்லாமல், ஒரு விஷயத்தில் நம்மை ஆழமாக ஈடுபடுத்திக் கொள்ளும்போதும் நாம் தொலைந்து விடுவோம். அதற்கான முயற்சியையும் நான் செய்து கொண்டேயிருப்பேன். சமையல், இசைக்கருவி, வரைதல், ஓவியம் தீட்டுதல், எழுதுதல் என்று. இவற்றிலெல்லாம் நான் சற்று நேரம் தொலைந்தாலும், முழுமையான ஒரு தொலைதல் எனக்கு நிகழ்ந்ததில்லை.

அப்படி என்னை நான் முற்றிலும் தொலைப்பது குழந்தைகளுடன் விளையாடும்போது, ஒருவருடன் ஆழமாக உரையாடும்போது, மற்றும் மலையேறும்போது. ஒருவருடனான ஆழமான உரையாடல் என்பது ஒரு பேரலல் உலகத்தில் நடப்பது போன்ற உணர்வு. நம் புலன்களல்லாத ஒன்றின் வழியாக இந்த பிரபஞ்சத்தை உணர்வது. ஒரு அந்தரங்கத்தின் புரிதல், ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து ஒன்றைத் தரிசிக்கும் முயற்சி. அப்படிப்பட்ட ஒரு உரையாடலுக்கு, பெரிதாகக் காரணங்களோ, கேள்விகளோ,வாக்குறுதிகளோ, நம்பிக்கைகளோ வேண்டியிருப்பதில்லை.

நேர்மை மட்டுமே போதுமானதாகயிருக்கிறது. அது ஒரு வாழ்க்கையை வாழ்வது போன்றது. பெரிதாக அர்த்தங்கள் வேண்டியிருப்பதில்லை, ஆனால் அதை நேர்மையாக அணுகும்போது கிடைக்கும் தருணங்களின் அழகியல். மலையேறுவதும் கிட்டத்தட்ட அது போன்ற ஒரு ஆழமான உரையாடல்தான் எனக்கு. மலர்கள், பட்டாம்பூச்சிகள், முகமறியாத பறவைகளின் பேச்சொலிகள், ஏதோ ஒரு மூலிகையை உரசி வந்த காற்று, விதவிதமான இலைகள் என்று ஒரு அந்தரங்கத்தின் புரிதல் அது.

நேற்று சுமார் மூன்றரை மணிநேர மலையேற்றம், 11 கிலோமீட்டர். ஆறு மலைகள் ஏறி இறங்கினேன். சர்வ நிவாரணம். தொலைந்துபோக நினைப்பவர்களுக்கு ஒரு ஆலொசனை மலைகளில் தொலைந்து பாருங்கள் அங்கே தொலைவதற்குப் பெரிதாக மெனக்கெடல்கள் வேண்டியிருப்பதில்லை. காலத்தைப் பின்னிழுத்து குழந்தைப் பருவத்திற்குப் போக வேண்டியதில்லை. ஒரு அந்நியராக நம்மைப் பாவித்துக் கொள்ளத் தேவையில்லை கூர் நினைவுகளைக் கூட மழுங்கடித்துக் கொள்ளத் தேவையில்லை மலையில் அடிமீது அடிவைத்து ஏறும்போது தொலைந்துபோகும் மூச்சைப்போல அது தன்னிச்சையாய் நிழந்துவிடுகிறது.அதன் உச்சியைச் சென்றடையும்போது கண்ணில் படர்ந்துவிரியும் காட்சியில் தொலைத்த நம்மை விட்டுவிட்டு வேறெதையோ எடுத்துக் கொண்டு கீழிறங்க விடுகிறது.

இப்படித் தொலைவதில் ஒரு சுகமான சவுகரியமுண்டு. மீண்டும் என்றாவது ஒருநாள் நம்மை மீட்டெடுக்கத் தோன்றினால் தொலைத்த இடத்திற்கே செல்லத் தேவையிருப்பதில்லை வேறு ஏதோ ஒரு தொலைதூர தேசத்தின்

மலை உச்சியை அடைந்தாலும் அங்கே பத்திரமாக நம்மை நமக்கு மீட்டுக்கொடுக்கும் ஒரு மலைக்குன்றின் தீப ஒளியைப் போல எங்கும் நிறைந்து சர்வ வல்லமை பொருந்தியதாக இருக்கின்றன மலைகள்.

மலைகளுடன், தீபா ஶ்ரீதரன்- தாய்வான்


# நெதர்லாந்தில் றோர்மோண்ட் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா

















நெதர்லாந்து றோர்மொண்ட் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 04-11-2023 சனிக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு பிரதம விருந்தினராக றோர்மொண்ட் நகரசபை அதிகாரி திரு. பெலிக்ஸ் வான் பல்லேகோய்ஜி (Mr.Felix van Ballegooij) அவர்களும், சிறப்பு விருந்தினராக றோர்மொண்ட் ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. 2022/2023 கல்வியாண்டில் நடை பெற்ற அனைத்துலகத் தமிழ்மொழித் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும், அதிதிறன், மிகுதிறனில் சித்தியடைந்தவர்களுக்கு கிண்ணங்களும் வழங்கப்பட்டது.

மேலும் இந்த விழாவிலே 2022/2023 கல்வியாண்டில் ஆண்டு 12 ஐ பூர்த்தி செய்த மாணவிகளான செல்வி. வர்மிஷா திரு ஞானலிங்கம் மற்றும் செல்வி. நவானி சிவரஞ்சன் ஆகியோரை, மன்றத்தின் தலைவரும், செயலாளரும் விருது வழங்கி மதிப்பளித்திருந்தனர்.



# அம்ஸ்ரடாமில் ஒரு குயில்



**க.ஆதவன்**
(டென்மார்க்)

அப்படித்தான் அது நடந்தது. ஆயிரங்கால் மண்டபம் போல. அல்லது, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி அலிபாபாவும் நாற்பது திருடர்களும் போல. அல்லது அலாவுதீனும் அற்புதவிளக்கும்.

நெஞ்சமெனும் பெருங்கூட்டிற்குள், பொத்திவைத்த கிளியென பேச்சுச் சொல்லிக் கொடுத்த காலமொன்றிருந்தது.

காக்கை துரத்திய குயிலென, பாடித் திரிந்த பறவையென, பறந்து திரிந்தார் ஆரணி.

ஆரணியை அவன் கண்டு கொண்ட கதைதான் இது.

ஆரணி! கொழும்பில் இருந்து வந்தவள். தாய் தேப்பன் இடம் பெயரும் பொழுது, குஞ்சுகளும் இடம் பெயரும்.

அவனுடன் படித்த விக்னேஸ் சொன்னான். தான் 12 பள்ளிக்கூடத்தில் படித்ததாக. அவனுக்கும் அப்போ புரிந்திருக்கவில்லை. விக்னேஸ்சின் தகப்பன் ரயில்வேயில் ஒரு கிளார்க்காக இருந்திருக்கலாம். ஆரணியின் அப்பாவும், ஒரு அரசாங்க உத்தியோகத்தராய் இருந்திருக்கலாம்.

அவனுக்கு அது ஒன்றும் பொருட்டல்ல.

ஆரணி வெள்ளையாய் இருந்தாள், ஆரணியின் கண்கள் பளிச்சென்று இருந்தன. அவனுடைய தந்தை சேகரித்து வைத்திருந்த, சாண்டில்யன் புனைந்த 'கடல் புறா 'நாவலை, பல தடவைகள் வாசித்தேன். ஆரணியின் வர்ணங்கள், வடிவுகள், நெளிவு, சுழிவு, ஏற்ற இறக்கம், இவை எல்லாவற்றையும் கொண்டுபோய் கடல் புறாவில் பொருத்தினான்.

பொருத்தம் மிகப்பொருத்தம்.

அவனுள்ளே காலையும் மாலையும், கணப்பொழுதும் ஆரணி வீற்றிருந்தாள். பள்ளிக்கூடத்தில் ஆரணி பெரிய லெவல் என்றும், பெடியங்களுடன் திமிராய் நடக்கின்றாள் என்று பேச்சு... புயலாய் வீசியது.

அவனுக்கு அவளுடன் பேசவேண்டும் என்ற உந்தல் எழுந்தது. ஆச்சரியம் என்னவென்றால்... ! அன்றைக்கு என, அவள் பேனா கொண்டு வரவில்லை.

அன்றைக்கு என அப்பா அவனுக்கு இரு புதுப்பேனாக்கள் கொடுத்திருந்தார்.

ஆரணி முழுசிக்கொண்டு இருந்தாள். ஆசிரியர் வந்துவிட்டார். 'எல்லோரும் இதை எழுதி உடனே கொண்டு வாருங்கோ' இது ஆசிரியர்.

அவன் நைசாத் தன் பேனாவொன்றை மேசைக்கு கிழாகத் தள்ளிவிட்டான்.

வகுப்பு முடிந்து போகும் போது அவள் வுாயமௌ என்றாள்.

இது போதும் அவனுக்கு. ஆரணியை ஆதாரிக்கத் தொடங்கினன்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு.

அம்ஸ்சரடாம் விமான நிலையத்தில்..

'என்னப்பா சும்மா அலையாமல் இந்தப் பிள்ளைக்கு பசிக்குது, அது அழுகுது, பிளேன் வர அஞ்சாறு மணித்தியாலம் ஆகுமாம். போய் ஏதாவது வாங்கிக்கொண்டு வாங்கோ'

அவனது மனைவி நச்சரித்தாள். சற்று நீண்ட கியூ. வரிசையில் நின்றுகொண்டு இருந்தான் அவன்.

' நீங்க தமிழா..?

எனக்கு ஒரு உதவி செய்வீங்களா? என்ரை பிள்ளைக்கு சரியான பசி அழுகிறாள். நான் கொஞ்சம் முன்னாலே போகவா?' குரல் கேட்டுத் திரு–ம்பினான்.

எங்கோ பார்த்த முகம். எங்கோ பார்த்த கண்கள். அவனது எல்லாவற்றையும் ஆக்கிரமித்த அதே ஆரணி.

நீங்கள் எந்த ஸ்கூலில் படிச்சனீங்கள்? அவன் கேட்டான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. ' நீங்க அந்த ஊர் தானே? 'அவள் ஒன்றும் சொல்லவில்லை.

' நீங்கள் கொழும்பில் இருந்து வந்து அந்தப் பள்ளிக்கூடத்தில், படிச்சு....'

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

'மேசைக்கு கீழாலை நான் பேனாவைக் தள்ளிவிட்டு,...'

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

கோட் சூட் ரை கட்டிக்கொண்டு ஒருத்தர் வந்தார். ' பிள்ளை அழுகுது பால் வாங்க–ிக்கொண்டு வாரும் என்று சொன்னால்... You are talking to some dirty people' என்றார். அவரை ஒரு தடவை முறைத்துவிட்டு, ஆரணியை நோக்கி ஒரு பெருமூச்சவிட்டு....

அவன் தன் மனையாளை நோக்கி நடக்கத் தொடங்கினான் .

## இலங்கை அதிபர் சேவையில் இணைந்துகொண்டார் நு/கார்லபேக் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாலினி



அட்டன் கொட்டகலை கொமர்ஷலைச் சேர்ந்த ராஜசிங்கம் மாலினி இலங்கை அதிபர் சேவையில் இணைந்து கொண்டார்.

இவருக்கான நியமனக் கடிதம் கடந்த 06.11.2023 அன்று கண்டி தர்மராஜ கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற அதிபர் நியமன கடிதம் வழங்கும் நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயினால் வழங்கப்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வி மற்றும் உயர்தர கல்வியை லுணுகலை தமிழ் வித்தியாலயத்தில் (லுனுகலை இராமகிருஷ்ணா வித்யாலயம் ) கற்றதுடன், 2004 ஆம் ஆண்டு உயர்தர பிரிவில் முதல்தர பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். பின்னர் மட்டக்களப்பு கல்வியற் கல்லூரியில் வணிகவியல் பாடத்தில் பயிற்சி பெற்ற இவர், கொட்டகலை தமிழ் வித்தியாலயத்தில் வணிகபாட ஆசிரியராக முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து லிந்துலை சரஸ்வதி தமிழ் வித்யாலயத்திலும் ,கார்லபேக் தமிழ் வித்தியாலயத்திலும் கடமையாற்றியுள்ளார் .தொடர்ந்து தனது வணிக இளமாணி பட்டத்தை நிறைவு செய்து தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி இளமாணி பட்டம் பெற்று, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி பட்டத்தை நிறைவு செய்ததுடன், தற்போது கல்வி தொடர்பான ஆய்வு பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

தனது பாடசாலை கல்வி முதல் இன்று வரை இலக்கிய எழுத்தாக்க துறையில் ஆர்வம் மிக்க இவர் உள்நாட்டு, பத்திரிகைகளிலும், யேர்மனியில் வெற்றிமணி பத்திகையிலும், இலங்கை, மலையகம் தொடர்பான கட்டுரை, கவிதைகளை எழுதி வருகி ன்றார். அதிபர் சேவையில் இணைந்து கடமைகளை ஆரம்பிக்கவிருக்கும் மாலினி, கல்வி சமூகத் துக்கு மேலும் பல செயற்பா டுகளை மேற்கொள்ளவேண்டுமென வெற்றிமணி வாழ்த்துகிறது.

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# ராஜபக்ஷக்கள் மீதான தீர்ப்பு! கலக்கத்தில் மொட்டு அணி!!

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மேன்முறையீட்டுக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது, மேலும் ராஜபக்ஷ அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்படலாம். எவ்வாறாயினும், அவர்கள் இறுதியில் விடுவிக்கப்பட்டாலும், அவர்களின் நற்பெயருக்கும், அவர்களது கட்சியின் இமேஜ்/க்கும் ஏற்பட்ட சேதத்தை சரிசெய்வது கடினம்.

## முன்னுதாரணமான நீதிமன்றத் தீர்ப்பு

இலங்கையில் நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்திற்கு காரணமானவர் களுக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்கள் மீதான இந்த உயர் நீதிமன்ற தீர்ப்பு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு முக்கிய தீர்மானமாகும். தவறான பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான ஒரு முதலாவது நகர்வாகவும், முன்னுதாரணமாகவும் இது அமைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல முன்னாள் அரசாங்க அதிகாரிகள் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மற்றும் மக்களின் நம்பிக்கையை மீறியுள்ளனர் என்று நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று கோரி வருபவர்களுக்கு இது ஒரு பெரிய வெற்றியாகும், மேலும் இது பொறுப்பானவர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும். நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கையின் ஜனநாயகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றும் கூறலாம். நீதித்துறை சுயாதீனமானது மற்றும் மிகவும் சக்திவாய்ந்த நபர்களைக் கூட அவர்களின் செயல்களுக்குப் பொறுப்பேற்கத் தயாராக உள்ளது என்பதை இது காட்டுகிறது. அரசியல் ஸ்திரமின்மை மற்றும் ஊழல் நிறைந்த நீண்ட வரலாற்றைக் கொண்ட நாட்டிற்கு இது ஒரு முக்கியமான ஒரு மைல் கல்!

## பொருளாதாரத்தில் சாதகமான தாக்கம்

இந்த தீர்ப்பு இலங்கையின் பொருளாதாரத்திலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். நெருக்கடிக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூற வைப்பதன் மூலம், பொருளாதார சீர்திருத்தத்தில் நாடு தீவிரமாக உள்ளது என்ற செய்தியை நீதிமன்றம் அனுப்பியுள்ளது. இது மிகவும் தேவையான வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் மற்றும் பொருளாதாரத்தில் நம்பிக்கையை மீட்டெடுக்க உதவும்.



நீதிமன்றத்தின் தீர்ப்பு பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான செயல்முறையின் ஆரம்பம் என்பது குறிப்பிடத்தக்கது. நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களான அதிக அளவு கடன் மற்றும் பொருளாதார பன்முகத்தன்மை இல்லாமை போன்றவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கம் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நெருக்கடியின் தாக்கத்திலிருந்து மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அது செயல்படுத்த வேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இலங்கைக்கு சாதகமான ஒன்றாகும். நாடு சரியான பாதையில் நகர்கிறது என்பதன் அடையாளம். ராஜபக்சக்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டதால், சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் யாரும் இல்லை, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்பவர்கள் பொறுப்புக் கூறப்படுவார்கள் என்ற வலுவான செய்தி சொல்லப்பட்டுள்ளது. அரசாங்க செலவினங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது போன்ற பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான செயல்முறைகளையும் இது வலுப்படுத்தும். எவ்வாறாயினும், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும் பொறுப்புக்கூறலை மீட்டெடுப்பதற்கும் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு படி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதற்கும் பொருளாதார மீட்சியின் பலன்கள் அனைத்து இலங்கையர்களாலும் உணரப்படுவதை உறுதி செய்வதற்கும் உறுதியான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

## தேர்தல் ஆண்டில் மாறும் களநிலை

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பனவற்றை அடுத்த வருடத்தில் எதிர்கொள்ளப்போகின்றது. உண்மையில் பொதுத் தேர்தல் 2025 இல்தான் நடைபெற வேண்டும். ஆனால், அதுவும் அடுத்த வருடத்தில் நடைபெறும் வாய்ப்புக்கள் உள்ளது. எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது தனக்கு சாதகமானது என்பதைக் கணித்து அதற்கான அறிவிப்பை ரணில் வெளியிடுவார்.

மீண்டும் ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் உபாயங்களை வகுத்துக்கொண்டிருப்பது ரகசியமானதல்ல. மொட்டு அணியைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷக்கள் அங்கில்லை என்றால் அது காற்றுப்போன ரயர்தான். உயர் நீதிமன்றத் தீர்ப்பு ராஜபக்ஷக்களின் இமேஜ்ஜை அடித்து நொருக்கியுள்ளது. இதனால் ராஜபக்ஷக்கள் யாருமே ஜனாதிபதித் தேர்தலில் இறங்கும் வாய்ப்பு மேலும் மங்கிப்போயுள்ளது. மொட்டுவின் சார்பில் ராஜபக்ஷக்களைத் தவிர்த்து மற்றொருவரை களமிறக்குவது முட்டாள்தனமானதாகவே இருக்கும். இனால், மொட்டு ஆதரவாளர்களுக்கு இருக்கக்கூடிய அடுத்த தெரிவு யார் என்ற கேள்வி எழுகின்றது. பெரும்பாலானவர்கள் ரணிலின் பக்கம் சாய்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது!

மொட்டுவின் அதிருப்தியாளர்கள், சுதந்திரக் கட்சி அதிருப்தியாளர்கள், சஜித் அதிருப்தியாளர்களை இணைத்து புதிய அணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ரணில் இப்போது இறங்கியுள்ளார். இதன்மூலமாக அடுத்த தேர்தல்களை சந்திப்பதுதான் அவரது உபாயம். அதே வேளையில் சிறுபான்மை யினரின் வாக்குகளையும் அறுவடை செய்யலாம் என ரணில் நினைக்கிறார்.

சஜித்தைப் பொறுத்தவரையில் ஒரு பலமான எதிர்க்கட்சித் தலைவர் என்பதைக்கூட அவரால் நிரூபிக்க முடியவில்லை. அவருடன் இருந்த பலரும் இப்போது ரணில் ஆதரவாளர்களாக மாறத் தொடங்கியுள்ளார்கள். ராஜபக்ஷக்களின் பாராளுமன்றப் பலம் ரணிலுக்குத் தற்போது தேவையாக இருந்தாலும், அவர்களுக்கு எதிரான தீர்ப்பை தனக்கான ஒரு வரப்பிரசாதமாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் தயங்கமாட்டார் என்பதைத்தான் தற்போதைய அரசியல் நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன!








அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# மூன்று சுற்று



சந்திரவதனா
(யேர்மனி)

நான் தொங்கித் தொங்கி கயிறடித்து விளையாடிக் கொண்டிருந்த பொழுதொன்றில் அம்மா கூப்பிட்டுச் சொன்னா "குக்கருக்கு மண்ணெண்ணெய் முடிஞ்சுது, ஓடிப்போய் வாங்கிக் கொண்டு வா" என்று.

அப்போது எனக்கு பத்து வயது இருக்கலாம். அல்லது அதை விடக் குறைவாகவும் இருக்கலாம். நினைவு படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனால் என்னைக் கடைக்கு அனுப்புவதை மெதுமெதுவாகக் குறைக்கும் வயதாகிக் கொண்டிருந்தது என்பது மட்டும் நல்ல ஞாபகம்.

அப்போதெல்லாம் அம்மா ஒரு வேலை சொன்னால் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் பழக்கம் எங்களிடம் இருந்ததே இல்லை. கூப்பிட்டால் "ஓம், என்னம்மா?" என்று கேட்பதும் ஒரு வேலை சொன்னால் உடனே அதைச் செய்ய முனைவதும் இயல்பாகவே இருந்தன. அதிலும் வெளியில் போய் செய்யும் ஒரு வேலையென்றால், அதை நான் மிகச் சந்தோசமாகவே செய்வேன். அப்பாச்சி வீட்டுக்கு ஏதாவது கொண்டு போய்க் கொடுப்பது, வட்டப்பாதிக்கு பிண்ணாக்கு வாங்கப் போவது, என்று எதற்கு அனுப்பினாலும் எனக்குச் சந்தோசம்.

வழிவழியே கிளுவங்காய், மாங்காய், புளியங்காய், இலந்தைக்காய்... ஒன்றும் ஆப்பிடாவிட்டால் அண்ணாமுண்ணாப் பூ என்று எதையாவது பிடுங்கிச் சாப்பிட்டுக் கொண்டு, அண்ணாமுண்ணாப் பூ எந்த வடிவில் இருக்கிறது! கிளிசரியாப்பூக்களெல்லாம் எப்படி இவ்வளவு அழகாக இருக்கின்றன! யார் யார் வீட்டுக்குள் எல்லாம் அழகழகான பூச்செடிகள் இருக்கின்றன... என்றெல்லாம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டு போவது பெரும் ஆனந்தம். அம்மா சொல்லித்தான் அனுப்புவா "உந்த வேலி, விராயளோடை நிண்டு, கரட்டி, ஓணானோடையெல்லாம் கதைச்சுக் கொண்டிராமல், கொண்டு போய்க் குடுத்திட்டு ஓடிவா" என்று.

அம்மா சொல்லும் போது என் மனதிலும் 'போறதும் வாறதும்' தான் இருக்கும். வீதியில் இறங்கிய உடனேயே மனசு பறக்கும். மூளை எல்லாவற்றையும் மறந்திடும். அதுவும் அப்பாச்சி வீட்டுக்குப் போகும் வழியில் வேலி முழுக்கக் கிளுவங்காய். அதில் இரண்டையாவது பிடுங்கி வாயில் போடாமல் அங்காலே போக மனசு வராது. அப்பாச்சி வீட்டுக்குள் போனால் அங்கு அப்பாவின் தம்பி பரமகுருக்குஞ்சையா நிறையப்புத்தகங்கள் வைத்திருப்பார். அதில் ஒன்றையாவது எடுத்து, ஒரு கதையையாவது வாசிக்காமல் திரும்பவும் மனசு விடாது. மேசையிலேயே ஏறியிருந்து வாசிப்பேன்.

அப்பாச்சிக்கு என்னைப் பற்றித் தெரியும். "ஓடு பிள்ளை, அங்கை கொம்மா பேசப் போறா" என்பா. அதுக்குப் பிறகுதான் சட்டென்று விழித்தது போல எழுந்து, மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடி, வீடு வந்து சேர்வேன். இன்று அம்மா அப்படியொன்றும் சொல்லவில்லை. நான் கொஞ்சம் வளர்ந்து விட்டேன். 'பொறுப்பாய் இருப்பேன்' என்று நினைத்தாவோ என்னவோ. "சங்கக்கடை பூட்டிடும். கெதியாப் போய் வாங்கிக்கொண்டு வா" என்று மட்டும் சொன்னா. "சைக்கிளை போயிட்டு வாறனம்மா" என்றேன். "நாலெட்டு நடக்கிற கடைக்கு என்னத்துக்குச் சைக்கிள்?" என்று சொன்ன அம்மாவுக்கு, 'சைக்கிள் ஓடுவதென்றால் எனக்கு நல்ல விருப்பம்' என்பது தெரியும். "சரி எண்ணையோடை சேர்ந்து கவிண்டு விழாமல், கவனமாப் போட்டு வா" என்றா.

உண்மையிலேயே எங்கள் சங்கக்கடை எங்கள் வீட்டிலிருந்து நாலெட்டு நடை தூரத்தில்தான் இருக்கிறது. எங்கள் வீட்டைத் தாண்டினால் இருபக்கமும் ஒவ்வொரு ஒழுங்கைகள் பிரிகின்றன. அதையடுத்து இடது பக்கம் உபதபாற்கந்தோரும் வலது பக்கம் பாம்புப் புற்றுகள் நிறைந்த ஒரு பெரிய புளியங்காணியும் இருக்கின்றன. அந்த ஒரேயொரு புளியங்காணியைத் தாண்டினால் ஆத்தியடிச் சந்தி வந்து விடும். வலது பக்கம் திரும்பினால் உடனே சங்கக்கடை. இதற்குச் சைக்கிள் தேவையே இல்லை.ஆனாலும் சைக்கிளில்தான் போனேன். ஆத்தியடிச் சந்தி வரை மண்ணெய் வாங்குவது மட்டுந்தான் என் மூளைக்குள் இருந்தது. சந்தியடிக்கு வந்த போதுதான் எல்லாம் மாறியது. நேரே ஆத்தியடி வெட்டையில் வாசுகியும் சிவாவும் சைக்கிள்களுடன் நின்றார்கள். அது ஆத்தியடிக்கோயில் வீதி. ஏன் அதை வெட்டை என்று சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அதுபற்றி நான் அப்போதெல்லாம் சிந்தித்ததும் இல்லை. வாசுகியும் சிவாவும் என்னை நோக்கி வர நான் அவர்களை நோக்கி சைக்கிளை உழக்கினேன். இருவரும் எங்கள் ஊர். எங்கள் சொந்தம். அதற்கு மேலால் வாசுகி என் பாடசாலை நண்பி. பெரும்பாலான பொழுதுகளில் இருவரும் ஒன்றாகவே பாடசாலைக்குப் போய் ஒன்றாகவே திரும்புவோம். சிவாவின் வீடு எங்கள் வீதியிலேயே நாலைந்து வீடுகள் தள்ளி உள்ளது.

விடலைப்பெண்கள் மூவர். எங்களையே மறந்து கொஞ்ச நேரம் கதைத்தோம். பிறகு கோயிலைச்சுற்றி ஆத்தியடி வீதியில் மூன்று சுற்று சைக்கிள்களில் சுற்றி வருவதாகத் தீர்மானித்தோம். சைக்கிளில்தானே! உடனே முடிந்து விடும். மனசு சொல்லியது. தொடங்கினோம். மனசு ஆனந்தத்தில் பறந்தது. மூன்று சுற்று பத்து, பதினைந்து இருபதாகப் போய்க் கொண்டிருந்தது. முதலில் கோயிலோடு சேர்ந்து சின்னச்சுற்றாகச் சுற்றிக் கொண்டிருந்த நாங்கள் இப்போது கோயில் வீதியின் வடக்கு எல்லைவரைக்கும் - தெற்குஎல்லைவரைக்குமாய் எங்கள் சுற்றுக்களைப் படுபயங்கரமாகப் பெருப்பித்திருந்தோம். பொழுது மம்மலாகியதோ இருட்டிக் கொண்டு வந்ததோ எங்களுக்குத் தெரியவேயில்லை.

அப்படியே ஒருதரம் தெற்கு வீதிக்கு வந்த போது சந்தியடியில் தம்பி பார்த்திபன் நிற்கிறான். 'ஏன் இவன் வந்திருக்கிறான்!?' சட்டென்று உறைத்தது. சைக்கிளை நிற்பாட்டி அவனிடம் போன போது "அம்மா மண்ணெண்ணெய்க்கு காத்துக் கொண்டிருக்கிறா. உடனை கூட்டிக் கொண்டு வரச்சொன்னவ" என்றான்.

எல்லாம் போச்சு! சங்கக்கடையை எட்டிப் பார்த்தேன். பூட்டி விட்டது. பயத்துடன் தம்பியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனேன்.

குக்கரைப் பற்ற வைக்க முடியாத அம்மா ஈரவிறகைப் பற்ற வைப்பதற்காக புகைந்து கொண்டிருக்கும் அடுப்பை ஊதிக் கொண்டிருந்தா. 'மண்ணெய் வேண்டுப் படவில்லை' என்றதும் திரும்பி ஒரு பார்வை என்னைப் பார்த்தா. 'அந்தப் பார்வை ஒன்றே போதும்' பேசவோ, அடிக்கவோ தேவையில்லை. நான் குற்ற உணர்வில் குறுகிப் போனேன்.






22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இயேசுவின் பிறப்பும்....

வழிபாடுகளையோ கூட இயேசு முன்னிலைப்படுத்தவில்லை. கிறிஸ்மஸ் தாத்தா, கிறிஸ்மஸ் மரம், நட்சத்திரம், குடில் என எல்லாமே கிறிஸ்மஸ் எனும் உன்னத தினத்தின் அர்த்தத்தை மறைப்பதற்காய் உருவான மதில் சுவர்களே !

கிறிஸ்மஸின் உண்மையான அர்த்தம் மனிதனில் இயேசுவைக் காண்பதில் இருக்கிறது. தொழுவில் பிறந்த இறைவனை சக மனிதனின் பழுவில் சந்திக்கும் போது கிறிஸ்மஸ் அர்த்தம் பெறுகிறது. கிறிஸ்மஸ் சொல்லும் அன்பின் பாடத்தை அறிந்து கொள்வோம். இயேசு பிறந்ததன் இன்னொரு நோக்கம் மனுக்குலத்தின் பாவங்களைச் சிலுவையில் சுமந்து தீர்ப்பது. அது இலவசமாய் நமக்குக் கிடைக்கும் மீட்பு. அது கிறிஸ்தவத்தின் நுழைவுச் சீட்டு.

அதன் பின், கிறிஸ்துவின் அன்பின் பணிகளை அயராது செய்பவர்கள் தான் விண்ணகத்தில் இறைவனால் அழைத்துச் செல்லப்படுவார்கள். கிறிஸ்மஸின் உண்மை அர்த்தத்தைப் புரிந்து கொள்வோம். விழா நாட்கள் மனிதம் விழா நாட்களாய் இருக்க உறுதி எடுப்போம். ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு நூல் வாசிக்கப்படாது....

அதுபோல வாசகர்கள் தமக்கு எது தேவையோ அதைத் தேடியே செல்வார்கள். தமக்குப் பயன்படுகின்ற நேரத்திலே மட்டுமே பயன்படும் நூல்களைப் பெற்றுக் கொண்டு வாசிப்பார்கள். அப்போது தேடலுக்கு வெற்றி கிடைக்கின்றது. கண்டது கற்கப் பண்டிதனாவான் என்னும் பழமொழி உண்மைதான். ஆனாலும், கண்டது கற்பதற்குரிய வாழ்நாளை அதிகரிக்கக் கூடிய மாத்திரை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதனால், நூல்கள் வெளியீட்டிற்கு வாசகர்கள் வரத் தயங்குகின்றார்கள். நூலாசிரியர்களை ஊக்குவிப்பதற்காக நூல்களை வாங்கி அந்த நூல் வாசிக்கப்படாது அலுமாரியில் அலங்கரிப்பது என்பது ஒரு நூலகத்தை எரிப்பதை விடக் கொடுமையான செயலாகும் என்றே நான் கருதுகின்றேன். நூல்களை வெளியீடு செய்பவர்கள் சிலர் முழுமை பெற்ற நூலை வெளியீடு மட்டும் செய்வார்கள். சிலர் அந்நூலாசிரியரை ஊக்குவிப்பதற்காகத் தம்மை இழந்து அந்நூலின் வெற்றிக்குச் செயலாற்றுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எழுத்தாளரின் எழுத்தாற்றலை மட்டுமே பெற்று அந்நூல் உருவாக்கத்தில் இருந்து செலவு, வடிவமைப்பு, முழுவதையும் தாமாகப் பொறுப்பேற்று அந்நூலை வெளியீடு செய்கின்றார்கள். அந்த வகையிலே தற்போது ஜெர்மனியில் வெளிவந்த வெற்றிமணி வெளியீடான வைகல் என்ற நூலை நாம் உதாரணமாகக் கூறலாம். அந்த நூலின் தரம் தீர்மானிக்கப்பட்டு வெளியீடு செய்யப்படுகின்றது.

இவ்வாறே சங்க காலத்திலே பாண்டிய மன்னனின் அவையிலே நூல்கள் அரங்கேறுகின்ற போது பல புலவர்கள் மத்தியிலே வாசிக்கப்பட்டு அவர்களின் ஒப்பிதல் பெற்றதன் பின்புதான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நூல்கள் அனல்வாதம் புனல் வாதம் செய்யப்பட்டன. நூல்களை நெருப்பினுள் போடுகின்ற போது எரியாது இருந்தால், அது சிறந்த நூல் என்றும் ஆற்றினுள் போடுகின்ற போது மேலெழுந்து எதிர்த்து வந்தால் அது சிறந்த நூல் என்றும் கருதப்பட்டது. இதற்காக அக்காலத்துப் புலவர்கள் மூலிகைகளைக் கையாண்டு தந்திரங்கள் செய்து வெற்றி பெற்றிருக்கின்றார்கள். சஞ்சீவி என்னும் மூலிகையானது தண்ணீரை எதிர்த்து வரும் தன்மையுடையது. அதனுடைய வேரினால் ஏடுகளைக் கட்டி நீரில் விடும் உத்திகளைக் கையாண்டிருக்கின்றார்கள். அதேபோல் மூலிகை மருந்தை ஏட்டுக்கட்டுகளில் பூசி எரிதனழில் இருந்து ஏடுகளை காப்பாற்றியிருக்கின்றார்கள். இது தகுதியிலலாத நூல்கள் வெளிவராமலே நெருப்புக்குள் அஸ்தியாகிவிட வேண்டும் என்ற கடுந்தன்மை அக்காலத்தில் இருந்திருக்கின்றது. இக்காலம் போல் அக்காலத்திலும் தம்முடைய நூல்கள் வெளிவருவதற்குப் புலவர்கள் தந்திரங்கள் மேற்கொண்டிருக்கின்றனர் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. இறையனார் அகப்பொருள் உரை முச்சங்கங்களில் நூல்கள் அரங்கேற்றியமை பற்றிச் சான்று கூறுகின்றது.

திருக்குறள் அரங்கேற்றும் போது ஔவையார் பரிந்துரை செய்யப்பட்டதாகவும் சிவன் எழுதிய

> கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
> காமம் செப்பாது கண்டது மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
> செறியெயிற் றரிவை கூந்தலின்
> நறியவும் உளவோ நீயறியும் பூவே

என்னும் பாடலை நக்கீரர் எதிர் வாதம் செய்ததாகவும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு ஆய்வுக்குட்பட்டு வெளிவருகின்ற நூல்கள் வாசகஉகளின் நேரத்தைப் பொன்னாக்கும், அறிவை விருத்தி செய்யும் மனத்துக்கு நல் மருந்தாகும். சில நூல்கள் கொல்லன் பட்டறை இரும்பில் பட்ட நீர்த்துளி போல காணாமல் போய்விடும். சில புத்தகங்கள் தாமரை இலை மேல் உள்ள நீர் போல நூலகத்தை மட்டும் அலங்கரிக்கும். சில புத்தகங்கள் மட்டுமே சிப்பிக்குள் விழுந்த முத்து போல பலருடைய பாவனைக்கு உரியதாகும் என்று வாரியார் சொல்கிறார். எனவே வெளி வருகின்ற நூல்கள் சிப்பிக்குள் முத்துப் போல் இருக்க வேண்டும். வாசகர்களின் தாகத்தையும் அறிவையும் மேம்படுத்த வேண்டும். ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இளைப்பாறுவதற்கும்...

retirement mindset ஐ நாசமாக்க வல்லவர்கள். இனிமேல் யாரோடு அதிகம் பழகவேண்டும், யாரோடு அளவோடு பழக வேண்டும், யாரோடு அறவே பழகக் கூடாது என்ற பட்டறிந்த தெரிவு தான் அந்த அழகான retirement mindset இற்கான அற்புதமான அத்திவாரம். எப்பவும் எதையும் பற்றி குறைவாக பேசுபவர்களும், தங்களை உயர்த்தி பிறரை தாழ்த்தி பேசுபவர்களும், எதிலும் குற்றம் குறை காணுபவர்களும், வாழ்க்கையை எதிர்மறையான negative mindsetஇல் நோக்குபவர்களும் இல்லாத, இல்லை குறைவாக தாக்கம் செலுத்தும் சூழலே நிறைவான அந்த இளைப்பாறுதலிற்கான உகந்த புறச்சூழலை ஏற்படுத்தவல்லது.

எங்களின் நீண்ட கால நட்புக்கள், நாங்கள் வாழ விரும்பும், வாழ நினைக்கும் வாழ்க்கையோடு இணைந்து பயணிக்கும் அனைனைளநவ உடையவர்களாக இல்லாமல் இருக்கவும் வாய்ப்புக்கள் உண்டு. அதே நேரத்தில் நாங்கள் வாழும் சூழலில், எங்கள் வாழ்க்கை முறையோடு ஒத்துப் பயணிக்கக் கூடிய புதிய நட்புக்களிற்கும், குறிப்பாக பிற இனங்களைச் சார்ந்தவர்களை எங்கள் நட்பு வட்டாரத்தில் இணைத்துக் கொள்ளவும் நாங்கள் எங்களை தயாராக்குவதும் இளைப்பாறுதலிற்கான உகந்த புறச்சூழலை ஏற்படுத்தவல்லது. வேலையில் இருந்து இளைப்பாறப் போகும் காலங்களில் எங்களைச் சூழ இருப்பவர்கள் எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியமானது எங்களது நேரத்தை எவ்வாறு கழிக்கப் போகிறோம் என்பது பற்றிய சிந்தனையோட்டம். பலரின் இப்போதைய பகல் பொழுதுகள் வேலையிலேயே கழிக்கப்பட்டிருக்க, வெற்றிடமாகப் போகும் அந்தப் பொழுதுகளை எவ்வாறு அனுபவிக்கப் போகிறோம் என்பதிலும் அனைனைளநவ முக்கிய பங்கு வகிக்கும்.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் எங்கள் பொழுதுகளை நாசமாக்க இருக்கும் சமூக வலைத்தளங்களைத் தாண்டி, எங்களுக்கு விருப்பமான ஒரு துறையையோ, பழக்கத்தையோ பொழுது போக்கையோ தேர்ந்தெடுப்பது எங்கள் mindset சார்ந்த இன்னுமொரு முக்கியமான முடிவாக அமையும். இவ்வாறு நாங்கள் விரும்பியே தேர்ந்தெடுக்கும் துறையோ பழக்கமோ எங்களது உடலையும் உள்ளத்தையுர் புத்துயிர்ப்போடு வைத்திருந்து, எஞ்சியிருக்கும் எங்கள் வாழ்க்கையை அனுபவித்து வாழ வழிசமைத்துத் தரும்.

இனிவர இருக்கும் இளைப்பாறும் காலத்தை வசந்த காலங்களாக்குவது, எங்களது வங்கி நிலுவையிலோ இல்லை பென்சன் பணத்திலோ தங்கியிருப்பதை விட, எங்கள் mindset இலேயே பிரதானமாக தங்கியிருக்கப் போகிறது. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உலகில் புலம்பெயர்ந்த மக்களை....

புலம் பெயர்வினால் புலம்பெயர்வோர் அனுபவிக்கின்ற சிரமங்களும் ஊடகங்களின் பேசுபொருளா கியுள்ளன. Pew Research Center என்கிற சமூக பிரச்சினைகளை ஆராயும் அமேரிக்க ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று , புலம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்பிரகாரம், சுமார் 24 கோடிக்கு மேல் புலம் பெயர்ந்த மக்கள்வெவ்வேறுநாடுகளில்வாழ்ந்து வருவதாகவும், இது உலக மக்கள் தொகையில் 3 சதவிகிதத்துக்கும் அதிகமான எண்ணிக்கை என்கிற ரீதியில், உலகத்தில் உள்ள அனைத்து புலம் பெயர்ந்த மக்களையும் வைத்து ஒரு நாட்டை உருவாக்கினால், அந்த நாடு உலகின் ஐந்தாவது மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. ■










# "செயற்கை நுண்ணறிவு"

# ஆபத்துகளை கையாள புதிய உலகளாவிய ஒப்பந்தம்


லண்டனுக்கு அருகிலுள்ள பக்கிங்ஹாம் ஷையரில் உள்ள பிளெட்ச்லி பூங்கா ஒரு காலத்தில் இரண்டாம் உலகப் போரின் முடிவை விரைவுபடுத்திய ஜெர்மன் உருக்கிய 'எனிக்மா கோட்' ஐ உடைத்த கோட் பிரேக்கர்களின் உயர்-ரகசிய தளமாகும். உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) பாதுகாப்பு உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இது தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இந்த குறியீடு ஒரு தெளிவான காரணமாகும்.

இரண்டு நாள் நவம்பர் 1-2 உச்சி மாநாடு உலகத் தலைவர்கள், கணினி விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப நிர்வாகிகளை ஈர்க்கிறது, ஒரு முன்னோடி ஒப்பந்தத்துடன் முதல் நாள் நிறைவு பெற்றது. செயற்கை நுண்ணறிவு ஆபத்துகளை கையாள புதிய உலகளாவிய ஒப்பந்தம், தீர்மானம் ஆகியவைகள் நிறைவேற்றப்பட்டன. யுனைடெட் ஸ்டேட்ஸ், சீனா, ஜப்பான், யுனைடெட் கிங்டம், பிரான்ஸ் மற்றும் இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 28 முக்கிய நாடுகள் ஏ.ஐ-ன் குறிப்பிடத்தக்க ஆபத்துகளை கையாள உலகளாவிய நடவடிக்கை தேவை என்று ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட ஒப்புக்கொண்டன.

"Frontier AI" என்பது மிகவும் திறமையான அடித்தளத்தை உருவாக்கும் AI மாதிரிகள் என வரையறுக்கப்படுகிறது. அவை பொது பாதுகாப்புக்கு கடுமையான ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய திறன்களைக் கொண்டிருக்கக்கூடும். பிரேசில், அயர்லாந்து, கென்யா, சவூதி அரேபியா, நைஜீரியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனம், வேண்டுமென்றே தவறாகப் பயன்படுத்துதல் அல்லது எல்லைக்குட்பட்ட AI-ஐக் கட்டுப்படுத்துவதில் திட்டமிடப்படாத சிக்கல்கள் -குறிப்பாக இணைய பாதுகாப்பு, உயிரித் தொழில்நுட்பம், ஆகிய வற்றால் ஏற்படும் கணிசமான அபாயங்களின் ஒப்புதலை உள்ளடக்கியது. மற்றும் தவறான தகவல் அபாயங்கள் என்று கூறியது. இங்கிலாந்து அரசாங்கம் இந்த ஏ.ஐ உச்சி மாநாட்டை நடத்துகிறது. இந்த அபாயங்கள் "சர்வதேச ஒத்துழைப்பு மூலம் சிறப்பாக தீர்க்கப்படுகின்றன" என்று பிளெட்ச்லி பார்க் பிரகடனம் கூறியது. எல்லைப்புற AI பாதுகாப்பிற்கான சர்வதேச ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தென் கொரியா அடுத்த ஆறு மாதங்களில் ஒரு மினி மெய்நிகர் ஏ.ஐ உச்சிமாநாட்டை இணைந்து நடத்தும், மேலும் பிரான்ஸ் அடுத்த 1 வருடத்திற்குள் நேரடி உச்சி மாநாட்டை நடத்தும்.

AI ஆல் ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் பாதுகாப்பதற்கும், ChatGPT மற்றும் Google Bard போன்ற உருவாக்கக்கூடிய AI போட்களை மதிப்பிடுவதற்கு நிறுவனங்கள் பயன்படுத்தும் பாதுகாப்பு வரையறைகளை மேற்பார்வை செய்வதற்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் ஒரு நிர்வாக ஆணையை வெளியிட்ட சில நாட்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது. வேகமாக முன்னேறும் AI தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்த பிடன் நிர்வாகம் எடுத்த முக்கிய முதல் படியாக இந்த உத்தரவு பார்க்கப்பட்டது. வெள்ளை மாளிகையின் துணைத் தலைவர் புரூஸ் ரீட், சீர்திருத்தங்களின் தொகுப்பு "AI பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் உலகில் எந்த அரசாங்கமும் இதுவரை எடுக்காத வலுவான நடவடிக்கைகளாகும்" என்றார். அன்று வெளியிடப்பட்ட உத்தரவு, புதிய திறன்களை நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்வதற்கு முன், AI நிறுவனங்கள் தங்கள் புதிய தயாரிப்புகளின் சோதனை முடிவு களை மத்திய அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். "ரெட் டீமிங்" எனப்படும் டெவலப்பர்களால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு சோதனைகள், புதிய தயாரிப்புகள் பயனர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. உத்தரவைத் தொடர்ந்து, ஒரு தயாரிப்பு அல்லது முன்முயற்சியை மாற்றியமைக்க அல்லது கைவிட ஒரு டெவலப்பரை கட்டாயப்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது. "இந்த நடவடிக்கைகள் AI அமைப்புகள் பாதுகாப்பானவை, பாதுகாப்பானவை மற்றும் நம்பகமானவை என்பதை நிறுவனங்கள் பொதுவில் வெளியிடுவதற்கு முன் உறுதி செய்யும்" என்று வெள்ளை மாளிகை கூறியது. மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணைய மைச்சர் ராஜீவ் சந்திரசேகர் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது பேசிய அவர்,இந்த முதல் கூட்டத்தில் சமூக ஊடகங்களால் பிரதிநிதித் துவப்படுத்தும் ஆயுதமயமாக்கலைக் கடக்க வேண்டும், மேலும் AI பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

"நிதி ஆயோக் அனைவருக்கும் பொறுப்பான AI பற்றிய தொடர் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இருப்பினும், நாட்டில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியை கட்டுப்படுத்தவோ அல்லது சட்டத்தை கொண்டு வரவோ அரசாங்கம் பரிசீலிக்கவில்லை" என்று வைஷ்ணவ் இந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார்.











# நல்லதாக நான்கு வார்த்தை

2023ம் ஆண்டு முடிந்து 2024 ஆண்டு பிறக்கிறது.

இந்த ஆண்டிலே ஒவ்வொரு மனிதரும் தமக்கு ஏற்ற அளவு ஏதாவது ஒரு சாதனை படைத்து இருப்பார்கள். அப்படி படைத்தவர்கள் யாவருக்கும், மேலும் பிறக்க இருக்கும் புதுவருடம் 2024 இல் மேலும் பல சாதனைகள் படைக்க வெற்றிமணி வாழ்த்துகிறது.

கடந்து போகவுள்ள 2023ம் ஆண்டில், இவர்களை நாலு நல்லவார்த்தை சொல்லி வாழ்த்தாமல் 2023 ம் ஆண்டைக் கடந்து போக முடியவில்லை.



**திரு.வி.சபேசன்.**
**சமூக செயற்பாட்டாளர்**- யேர்மனி

★விடாமுயற்சி
★இலக்கை நோக்கிய பயணம்.
★தமிழர் அரங்கத்தின் தமிழ்ப்பணி.
★நேர்மறையான சிந்தனைகள்.

**இவற்றுக்காக பாராட்டி மகிழ்கிறேன்.**



**ஓவியர் கே.கே.ராஜா** – லண்டன்

★மலையக மக்கள் மீது உள்ள பற்று
★விம்பம் மூலம் நிஜங்களின் தரிசனம்
★ஓவியர் மார்க்கை நினைவூட்டல்.
★புத்தகங்களை அறிமுகம் செய்தலும் தன் முகம் காட்டா செயற்பாடும்.

**இவற்றை எண்ணி பாராட்டி மகிழ்கிறேன்.**

**கவிதா லட்சுமி**
கலாசாதனா – நோர்வே

★தேடலும் வெளிப்பாடும்
★பரதக்கலை மீது உள்ள வெறி
★நடன ஒத்திகையும், அரங்கவெளிப்பாடும்
★ஐம்பூதங்களின் காதலி (வானம்,காற்று,நெருப்பு,நீர்,நிலம்)

**2023 ம் ஆண்டை கவிதாவைப் பாராட்டாமல் கடந்து போக முடியவில்லை.**



**பாரதி இராசநாயகம்**
**ஊடகவியலாளர்** –இலங்கை

★சமகால அரசியல் ஆய்வாளர்.
★பக்கச் சார்பு அற்றவர்
★தரவுகள் சேர்க்க குறியாய் இருப்பவர்
★தன்னம்பிக்கை மிக்கவர்.

**தம்பி பாரதிக்கு வாழ்த்துகள்.**



**எழுத்தாளர் சேவியர்** – தமிழ் நாடு



★பணத்திற்காக ஏதும் படைக்காதவர்
★யதார்த்தமான எழுத்து நடை
★பிறர் மதங்களையும் நேசிக்கும் ஒரு பெருமகன்.
★பேச்சிலும் செயலிலும் அன்பிருக்கும்.

**ஒரு தந்தை மகன் உறவாக இவனைப் பாராட்டி மகிழ்கிறேன்.**

**கவிஞர்.வி.கந்தவனம்** – கனடா




★சமகாலத்தில் வாழ்கின்ற தமிழ் அறிஞர்.
★வாழ்வில் பெரும் பகுதி பிறரை வளர்ப்பதில் கழித்தவர், மகிழ்தவர்,மகிழ்பவர்.
★முற்போக்கு, பிற்போக்கு, என்று அதற்குள் தன்னை சிறைப்பிடிக்காதவர்.
★90 வயதிலும் எழுத்தாளர்களின் குரல் கேட்டதும் மகிழ்பவர்.

**உங்களை வாழ்த்துவோம், வணங்குவோம் ஐயா.**

இவர்களையும், நிச்சயமாகப் பாராட்டாமல் 2023 ம் ஆண்டினை என்னால் கடந்து செல்ல முடியாது. 30 வருடமாக வெற்றிமணிக்கு கரம் தரும் படைப்பாளிகள்,வாசகர்கள், வியாபார நிறுவனங்கள், இவர்களை வாழ்த்தாமல் இருக்க முடியுமா!

நீங்கள் வெற்றிமணி யின் ஆணிவேர் அல்வா! 2024 ஆண்டு யாவருக்கும் சாதனை ஆண்டாக மலரட்டும். 30 ஆண்டுகளாக உங்களுடன் பயணிப்பதில் மகிழ்கின்றேன்.



**என்றும் தமிழுடன்**
**மு.க.சு.சிவகுமாரன்** - யேர்மனி

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு மெழுகுதிரியில் பலகோடி

முடிவு புள்ளி இதில் மேலே ஒரு கோடு போடப்பட்டிருக்கின்றது, அதன் அர்த்தம் இந்த ஐந்து நிமிட காலகட்டத்தில் எவ்வளவு தூரம் உயரம் சென்றது என்பது, கீழே இருக்கின்ற கோட்டின் அர்த்தம் இந்த ஐந்து நிமிட காலகட்டத்தில் எவ்வளவு தூரம் கீழே சென்றது என்பதும் தான் அர்த்தமாக இருக்கின்றது. இதில் மேல்கோடு இல்லாமல் வருவதற்கு வாய்ப்பிருக்கின்றது கீழ்க்கோடு இல்லாமல் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது இரண்டு கோடுகளும் இல்லாமல் மெழுகுதிரி அமைந்திருப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றது. அதை தனியாக பார்ப்போம். இன்றைய இந்த இடத்தில் நாம் மிக முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒரு மெழுகு திரியின் கீழ் மெழுகு ஆரம்ப புள்ளி மேல் மெழுகு முடிவு புள்ளி மேல் திரி எவ்வளவு தூரம் உயரமாக வியா பாரம் செய்யப்பட்டது, கீழ் திரி எவ்வளவு தூரம் அந்த நிறுவனத்தின் வியாபாரம் வீழ்ச்சி அடைந்தது என்பதை குறித்து காட்டும். இதே போன்றுதான் சிகப்பு மெழுகுதிரியும், ஒரே ஒரு வித்தியாசம், சிவப்பில் O (Open) மேலும் C (Close) கீழும் இருந்தால் நிறுவனம் விழுந்துகொண்டுருக்கிறது என்று அர்த்தம். ஆகவே சிவப்பாக அமையும். அடுத்தது காலகட்டம் இது இரண்டாவது அத்திவாரம். காலகட்டம் என்றால் இந்த மெழுகுதிரி ஒரு நிமிடத்தில் வளர்ந்த வளர்ச்சியை பார்ப்பது, அல்லது இரண்டு நிமிடத்தில் வளர்ந்த வளர்ச்சியை பார்ப்பது, ஐந்து நிமிடம், ஒரு மணித்தியாளம், ஒரு நாள், ஒரு வாரம் என்று இந்த வளர்ச்சியை நாம் ஒரு மெழுகுதியாக மாற்றிப் பார்க்கும் காலத்தை, காலகட்டம் என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் Time Frame என்று கூறப்படுகின்றது. இந்த இரண்டு விடயங்களும் தெரிந்திருந்தால், இதில் சந்தேகம் இல்லாமல், கசட கற்றுந் தால் நீங்கள் தைரியமாக டிரேடிங் செய்ய ஆரம்பிக்கலாம். அடுத்த தொடரில் உங்களில் எத்தனை பேர் கற்க கசடற கற்றுள்ளீர்கள் அல்லது சந்தேகங்கள் ஏதாவது இருக்கின்றதா என்று, உங்களுடைய கருத்தை எங்களுக்குத் தெரிய தாருங்கள். சந்தேகங்கள் எதுவும் இல்லை என்றால், வருகின்ற தொடரில் நாம் டிரேடிங்க்குள் காலடி எடுத்து வைத்து நகரத் தொடங்கப் போகின்றோம். நீங்கள் சொந்த முதலாளியாக மாறலாம், யாருடைய உதவியும் இல்லாமல் உங்கள் வீட்டில் இருந்து கொண்டே, வேலை செய்ய ஆரம்பிக்கலாம்.




# அட்லி படத்தில் விஜய் ஷாருக்கான்?



அட்லியின் அடுத்த திரைப்படத்தில் விஜய் மற்றும் ஷாருக்கான் இணைந்து நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளதை அடுத்து இந்த படம் உருவானால் 2000 கோடி வசூலாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தளபதி விஜய் நடித்த தெறி, மெர்சல் மற்றும் பிகில் ஆகிய மூன்று படங்களை அட்லி இயக்கி உள்ளார். அதேபோல் ஷாருக்கான் நடித்த ஜவான் திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

இந்த நிலையில் தனது அடுத்த படத்தில் விஜய் மற்றும் ஷாருக்கான் ஆகிய இருவரையும் இணைந்து நடிக்க வைக்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் இருவரும் சரியான கதை இருந்தால் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறதாக தெரிவித்தார். எனவே எனது அடுத்த படம் விஜய் மற்றும் ஷாருக்கான் இணைந்து நடிக்கும் படமாக தான் இருக்கும் என்றும் அட்லி பேட்டியில் கூறியுள்ளார்.

இது மட்டும் நடந்தால் இந்திய திரையுலகில் மிகப்பெரிய வசூலை வாரி குவிக்கும் படமாக இருக்கும் என்று திரை உலக வட்டாரங்கள் கூறுகின்றன.



# ரஜினியின் பாட்ஷா ரீமேக்கில் அஜித்

ரஜினியின் சினிமா வாழ்க்கையில் சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் அவர் நடித்த பாட்ஷா முக்கியமான படம். இந்த படம் ரஜினி ரசிகர்களுக்கு மட்டுமின்றி ரஜினிக்கும் தான் நடித்ததில் மிகவும் பிடித்த படம் என்பது குறிப்பிடத்தக்கது.

கேங்ஸ்டர் கதையில் உருவான இந்த படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிப்பதற்கு ரஜினியை சுரேஷ் கிருஷ்ணா தொடர்பு கொண்ட போது, ஒரு பாட்ஷாவே போதும், இரண்டாம் பாகம் வேண்டாம் என்று சொல்லி நடிப்பதற்கு மறுத்து விட்டார்.

இந்த நிலையில் பாட்ஷா படத்தை ரீமேக் செய்ய திட்டமிட்டு வருகிறார் சுரேஷ் கிருஷ்ணா. அந்த படத்தில் நாயகனாக விஜய்-அஜித் இருவரில் ஒருவரை நடிக்க வைக்க அவர் திட்டமிட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகி வந்தன. இந்நிலையில் சமீபத்தில் பாட்ஷா ரீமேக்கில் நடிக்கப் போவது விஜய்யா? அஜித்தா? என்று அவரிடத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, ரஜினியின் பில்லா என்ற கேங்ஸ்டர் படத்தில் நடித்தார் அஜித்குமார்.

அந்த ரீமேக் படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைத்தது. அதனால் பாட்ஷாவாக நடிப்பதற்கும் அவர்தான் பொருத்தமாக இருப்பார் என்று கூறியுள்ளார். அதனால் ரஜினியின் பில்லாவை தொடர்ந்து பாட்ஷா படத்தின் ரீமேக்கிலும் அஜித்குமாரே நடிப்பார் என்பது தெரியவந்துள்ளது.

# இந்தியன் 2 உடன் மோதும் கங்குவா

கமல்ஹாசன் நடிப்பில் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் 'இந்தியன் 2' படம் தொடங்க ப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வெளியாகவில்லை.

இதுவரை எடுக்கப்பட்ட காட்சிகளை வைத்து பார்த்ததில் படத்தை இரண்டு பாகங்களாக வெளியீடு செய்யலாம் என்ற முடிவை படக் குழுவினர் எடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

அதனால் மேலும் சில காட்சிகளை படமாக்க வேண்டியுள்ளதாம். அந்த படப்பிடிப்பு முடிந்தபின்னர்தான் வெளியீட்டு வேலைகள் தொடங்கும் என தெரிகிறது.

இந்நிலையில் இந்தியன் படத்தின் 2 ஆம் பாகம் ஏப்ரல் 14 ஆம் திகதி வெளியாக வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது.

அதே திகதியைத் தான் சூர்யா நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கும் கங்குவா திரைப் படம் குறிவைத்து உருவாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





# தன் படத்தை இயக்காத இயக்குனருக்கே அப்போ கார் வழங்கியவர் ஜெயசங்கர்

நடிகர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் ஒருநாள் தனது மனைவி மற்றும் மகனுடன் பைக்கில் செல்வதை ஜெயசங்கர். பார்த்தார்.

அப்போது அவர் எஸ்.ஏ.சந்திரசேகரை அழைத்து என்னிடம் உள்ள கார்களில் ஏதாவது ஒன்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஆனால் இலவசமாக நான் காரை பெற மாட்டேன் என்று எஸ்ஏ சந்திரசேகர் கூறியதை அடுத்து, 'உங்களால் எப்போது பணம் கொடுக்க முடியுமோ அப்பொழுது கொடுங்கள் அல்லது தவணை முறையில் கூட கொடுங்கள்' என்று கூறி தன்னுடைய விலை உயர்ந்த காரை எஸ் ஏ சந்திரசேகருக்கு கொடுத்தார்.

விஜய்யின் தந்தைக்கு அந்த காலத்தில் கார் கொடுத்தார் என்றால் அது ஜெய்சங்கர் தான் இந்த நிலையில் நடிகர் ஜெய்சங்கர் 2000ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் தேதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக தனது 61வது வயதில் காலமானார்.







Jasmine Silk House
ஆடைகளின் ராணி
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
அனைவருக்கும் நத்தார்,
2024 புதுவருட
வாழ்த்துகள்
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
2024 நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
Ludwig str.87a
70197
Stuttgart
SALE
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Inhaber : ஜெயக்குமார் வினோதகுமார்
TRUST TRAVELS
YOUR ADVENTURE-OUR EXPERTISE
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்
அனைவருக்கும்
நத்தார், புதுவருட
வாழ்த்துகள் 2024


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698
2024 நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்